


**முனைவர். கே. கே. சுவாமி**

இன்று அதிகமான பேர்களால், அதிகம் பேசப் படும் இயக்கம் ஆர்.எஸ்.எஸ். பார்வையற்றவர் கள் யானையைப் பற்றி விவரித்த கதையாக, சிலர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைப் பற்றித், தாறுமாறாகப் பேசினாலும், அந்த அமைப்பை நேர்மையாகப் புரிந்து கொண்டவர்கள், உளமாறப் பாராட்டு கிறார்கள். மகாத்மா காந்திஜி, அம்பேத்கார், பூஜ்ய சித்பவானந்த ஸ்வாமிகள், பூஜ்ய சின்மயானந்த, சங்கராச்சாரியர்கள், பல சமூக தலைவர்கள் போன்ற எண்ணற்றோர் இதில் அடங்குவர்.

நம் நாட்டில் செயல்படும், பல அமைப்புகளின் செயல்பாடுகளைக் கண்ணுற்று வரும் பலர் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின்; தனித்தன்மை வாய்ந்த செயல்முறைகளைக் கவனித்த பிறகு, மூக்கின் மீது விரலை வைக்கின்றனர். ''அதிசயமே அதிசயிக்கும் ஆர்.எஸ்.எஸ்.,'' என வியக்கின்றனர்.

விலை : ₹. 10.00




விஜயபாரதம் பதிப்பகம்

## அதிசயமே அதிசயிக்கும்

# ஆர்.எஸ்.எஸ்.

முனைவர் கே.கே.சுவாமி

விஜயபாரதம் பதிப்பகம்

வெளியீடு : **விஜயபாரதம் பதிப்பகம்**
12, எம்.வி. நாயுடு தெரு,
சேத்துப்பட்டு
சென்னை - 600 031.
vijayabharatham78@gmail.com

முதல் பதிப்பு : மன்மத ஆண்டு - ஓணம் பண்டிகை
ஆகஸ்ட் 28, 2015

விலை : **10.00**

அச்சிட்டோர் : மாதவமுத்ரா
சென்னை - 600 031.
தொலைபேசி : 2836 0874



# அணிந்துரை

ஆர்.எஸ்.எஸ். இன்று பலரும் அறிந்த அமைப்பு; ஆனால் அதை நிறுவியவர் யார், அந்த அமைப்பு எப்படி செயல்படுகிறது என்பது சிலருக்கே தெரிந்திருக்கிறது. ஊடகமும் சரி, சில நபர்களும் சரி, ஆர்.எஸ்.எஸ்ஸைப் பற்றி வேண்டுமென்றே அவதூறாகச் சித்தரிக்க முயன்றிருக்கிறார்கள். 'ஆர்.எஸ்.எஸ். பாசிஸ அமைப்பு; அது வகுப்புவாத அமைப்பு; தேச விரோத அமைப்பு; முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிரானது; காந்திஜியை கொலை செய்தவர்கள்' என்றெல்லாம் தப்பாக பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். ஆனால் பாரதத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆர்.எஸ்.எஸ். நாளுக்கு நாள் பலமோங்கி வருகிறதே இது எப்படி, என்று சங்கத்தை எதிர்ப்பவர்களுக்கு ஒரே ஆச்சரியம்.

ஏனென்றால் ஆர்.எஸ்.எஸ். ஷாகாவை அல்லது ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சியை நேரில் வந்து பார்த்து புரிந்து கொள்கிற எவரும் சங்கம் பற்றிய தப்பெண்ணத்தை மாற்றிக்கொள்கிறார்; சங்க ஆதரவாளர் ஆகிவிடுகிறார். மகாத்மா காந்தி, டாக்டர் அம்பேத்கர், ஜெயப்பிரகாஷ் நாராயணன், சர்தார் வல்லபாய் படேல் என எத்தனையோ பெரியோர்களும் அரசியல் தலைவர்களும் உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதியரசர்களும் நமது சமுதாய பிரமுகர்களும் இந்த அனுபவத்தை அடைந்தவர்களே.

ஆர்.எஸ்.எஸ். ஒரு தத்துவம் அல்ல; மனிதர்களிடம் மாற்றம் ஏற்படுத்தும் செயல் துடிப்புள்ள அமைப்பு; சுயநலத்தை மையமிட்டு வாழும் மனிதர்களை, தன்னலமற்ற தேசபக்தர்களாக மாற்றுகிறது ஆர்.எஸ்.எஸ். பிறருக்கு சேவை செய்ய எப்போதும் ஆயத்தமானவர்களாக, தேசத்திற்குத் தொண்டாற்ற சதா சித்தமாக இருப்பவர்களாக, அந்த அரும்பணிக்காக தியாகம் புரிபவர்களாக மாற்றுகிறது சங்கம்.

ஆந்திர கடற்கரையோர கிராமங்கள் புயலில் சின்னாபின்னமான போது ஆர்.எஸ்.எஸ். ஸ்வயம்சேவகர்கள் செய்த மீட்பு, நிவாரண, மறுவாழ்வுப் பணிகளைப் பார்த்து சர்வோதயத் தலைவர் பிரபாகர ராவ், ''ஆர்.எஸ்.எஸ். என்றால்'' **Ready for Selfless Service** என்று வர்ணித்தார்.

மகாத்மா காந்தி 1947ல் டெல்லியில் சங்க ஸ்வயம்சேவகர்களிடையே பேசுகையில் ''ஆர்.எஸ்.எஸ். ஸ்தாபகர் (டாக்டர் கேசவ பலிராம் ஹெட்கேவார்) இருந்த காலத்தில் சங்க முகாம் ஒன்றை சென்று பார்த்தேன்; ஸ்வயம்சேவகர்களின் பரிபூரண எளிமையும், தீண்டாமை அறவே இல்லாத சூழலும் என்னை வெகுவாகக் கவர்ந்தன'' என்பதை நினைவுபடுத்திய தோடு, சேவை மனப்பான்மை உள்ள கட்டுப்பாடான இந்த இயக்கம் நிச்சயம் வளரும் என்று கூறினார்.

சங்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருந்த நேரம்; ''ஆர்.எஸ்.எஸ். தேசபக்த அமைப்பு; கொள்ளைக்காரர்களுக்குத் தான் தடியெடுக்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தேசபக்தர்கள்'' என்று சுதந்திர பாரதத்தின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் பட்டேல் தெளிவுபடுத்தினார்.

ஆர்.எஸ்.எஸ். பற்றிய உண்மை சித்திரத்தை இதுபோல் பொதுமக்கள் தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்; அனைவரும் ஆர்.எஸ்.எஸ். ஷாகா நடக்கும் போது அவர்கள் வந்து பார்த்துப் புரிந்துகொள்ள வகை செய்ய வேண்டும்; அன்றாட வாழ்வில் ஸ்வயம்சேவகரின் பண்பு நலனை மக்கள் பார்த்துப் புரிந்துகொள்ளச் செய்ய வேண்டும். ஆர்.எஸ்.எஸ்.ஸை முழுமையாகத் தெரிந்து கொள்ள அதுதான் வழி.

ஆர்.எஸ்.எஸ்ஸின் வடதமிழக துணைத் தலைவர் டாக்டர் K. குமாரஸ்வாமி என்ற K.K. சுவாமி 'ஆர்.எஸ்.எஸ். என்றால் என்ன? அது செயல்படும் விதம் எப்படி?' என்பதை வெகு சிரத்தையுடன், சித்தரித்திருக்கிறார். இன்று நிறைய இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஆர்.எஸ்.எஸ். மிகவும் பிடித்திருக்கிறது. எனவே சங்கத்தின் லட்சியம், செயல்முறை இவற்றை அனைவரும் தெரிந்துகொள்ள இத்தகைய ஒரு நூல் மிகமிக அவசியம்; புதியவர்கள் ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள இந்த நூல் நல்ல தூண்டுதல் தரும்.

இந்த சிறு நூல் வாயிலாக ஆர்.எஸ்.எஸ்.ஸை அறிமுகம் செய்து வைத்துள்ள டாக்டர் குமாரஸ்வாமிக்கு எனது மனமார்ந்த பாராட்டு. இந்த நூல், பரவலாக நிறைய பேரை சென்றடைந்து அதிகமதிகமானவர்கள், ஆர்.எஸ்.எஸ்.ஸில் இணைந்து நமது தாய்நாட்டுத் தொண்டில் தோள் கொடுக்கச் செய்வார்கள் என நான் கருதுகிறேன்.

**- கி. சூரியநாராயண ராவ்**

*ஆர்.எஸ்.எஸ். மூத்த பிரச்சாரகர், சென்னை*





## முகவுரை

வண்ணக் கண்ணாடி மாட்டி பார்க்காமல், விருப்பு வெறுப்பின்றி, மூன்றாமவர் பார்வையில், ஆர்.எஸ்.எஸ். என்றழைக்கப்படும் ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கத்தைப்பற்றி, உள்ளது உள்ளபடியே எழுத, எடுத்த முயற்சியின் விளைவுதான், அதிசயமே அதிசயிக்கும் ஆர்.எஸ்.எஸ்., என்ற உங்கள் கையில் தவழும், இப்புத்தகம் ஆகும்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பை எதிர்த்தவர்கள் சாமான்யர்கள் அல்லர், அதன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கொஞ்சநஞ்சம் அல்ல.

இவற்றையெல்லாம் மீறி மூன்று தலைமுறைக் காலமாய் (90 ஆண்டுகள்) தொடர்ந்து, பிளவுபடாமல் ஆர்.எஸ்.எஸ். செயல்படுகிறதே அது எப்படி?.

கடும் எதிர்ப்பாளர்கள் சங்கத்தின் இதமான ஆதரவாளர்களாக மாறிவிட்டார்களே, அது எப்படி?

இப்படி பல அதிசய செய்திகளோடு சங்கத்தின் உயர்ந்த லட்சியம், எளிய செயல்முறை, ஊழியர்களின் தனித்தன்மை, ஆகிய அம்சங்களை புரிந்து கொள்ளும் பலரும், சங்கத்தைக் கண்டு வியந்து நிற்கிறார்களே, அது ஏன்?

இப்படி பல பயனுள்ள செய்திகளை தங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

நேர்த்தியாக தட்டச்சு செய்து கொடுத்து, பிழைகளைக் களைந்து இப்புத்தகம் அழகாக வெளிவர உதவிய ஆடிட்டர். H. சீனிவாசன், திரு. ஜெயமணி ஆகியோருக்கும், நல்ல செய்திகள் அதற்கேற்றப் படங்களுடன் புத்தகம் வடிவமைக்கப்படக் காரணமாயிருந்த திரு. R.K.பிரசாத், திரு. பிரகாஷ், திரு. ம. வீரபாகு மற்றும் சரியான சமயத்தில் புத்தகத்தை வெளியிட துணை நின்ற விஜயபாரதம் பதிப்பகத்தாருக்கும் ஏனைய நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

அணிந்துரை வழங்கி ஆசியளித்துள்ள மான்யவர், சூரிஜிக்கு ஆத்மார்த்த மான வணக்கங்கள்

**கே.கே.சுவாமி**
drkkslm@gmail.com

## ஆர்.எஸ்.எஸ். - குறிக்கோள்

சுவாமி விவேகானந்தர் 1893 சிகாகோ சர்வமதமகாசபை பேருரைகளுக்குப் பிறகு, சில ஆண்டுகள் அமெரிக்காவிலேயே இருந்தார். ''நான் என் இதயத்தைப் பறி கொடுத்துவிட்டேன்!'' என்று ஒரு நாள் சுவாமிஜி புலம்பினார்.

"சுவாமிஜி, யார் உங்களைக் கவர்ந்த அந்த அழகிய கன்னி? என்று அசட்டுத்தனமாக ஒரு அமெரிக்க அன்பர் வினவ, சுவாமி கூறினார்:

''அப்படி யாருமில்லை, அமெரிக்க நாட்டின் ஒருங்கிணைந்த சமுதாயம் (Orgnised Society) என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. எனது பாரத சமுதாயம் ஒருங்கிணைந்து செயல்படுதலைக் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று கூறினார்.

உண்மையாகவே, ஆர்.எஸ்.எஸ். சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் பணியைத்தான் செய்துவருகிறது. ஆனால் தவறுதலாக புரிந்து கொண்டு வசை பாடுவோர் சிலர்; சுயநல அரசியல் ஆதாயம் தேட சங்கத்தைத் தூற்றுவோர், வேறு சிலர்.

இதனிடையே சங்கத்தைப் புரிந்து கொண்டு போற்றுவோர் பலர்.

இந்நிலையில், ஒரு மூன்றாமவர் பார்வையில், புதியவர்களுக்கு சங்கத்தைப் புரிய வைக்கும் பார்வையில், எடுத்த முயற்சியே, இப்புத்தகத்தின் வெளிப்பாடு. புதிதாய்ப் பார்ப்பதும், வியந்து நிற்பதும், வெளியிலிருக்கும்வரை! சங்கத்தை நெருங்கி வந்து, புரிந்து கொண்டால், எல்லாமே சத்தியம்தான், வியப்பில்லை.

இன்று அதிகமான பேர்களால், அதிகம் பேசப்படும் இயக்கம் ஆர்.எஸ்.எஸ். பார்வையற்றவர்கள் யானையைப் பற்றி விவரித்த கதையாக, சிலர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைப் பற்றித், தாறுமாறாகப் பேசினாலும், அந்த அமைப்பை நேர்மையாகப் புரிந்து கொண்டவர்கள், உளமாறப் பாராட்டுகிறார்கள். மகாத்மா காந்திஜி, அம்பேத்கார், பூஜ்ய சித்பவானந்த ஸ்வாமிகள், பூஜ்ய சின்மயானந்த, சங்கராசாரியர்கள், பல சமூக தலைவர்கள் போன்ற எண்ணற்றோர் இதில் அடங்குவர்.



நம் நாட்டில் செயல்படும், பல அமைப்புகளின் செயல்பாடுகளைக் கண்ணுற்று வரும் பலர் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின்; தனித்தன்மை வாய்ந்த செயல்முறைகளைக் கவனித்த பிறகு, மூக்கின் மீது விரலை வைக்கின்றனர். ''அதிசயமே அதிசயிக்கும் ஆர்.எஸ்.எஸ்.'' என வியக்கின்றனர்.

ஒருமுறை லண்டனில் B.B.C. வானொலியானது, ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், லிவர்பூல் போன்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு, ஒரு விநாடி-வினா (Quiz) நிகழ்ச்சியை நடத்தியது. அதில்,

''உலகிலேயே மிகப்பெரிய, கட்டுப்பாடான, தன்னார்வ, சமுதாயத் தொண்டு நிறுவனம் எது?'' என்ற கேள்விக்கு, எந்தக் குழுவினரும் சரியான விடையை அளிக்க முடியவில்லை.

நிகழ்ச்சியை நடத்தியவரே (Quiz Master) ''ஆர்.எஸ்.எஸ்.'' என்றார்; அனைவரும் திகைத்து நின்றனர். நிகழ்ச்சிக்குப் பிறகு பல கேள்விகள் மூலம் சங்கத்தைப் பற்றித் தெரிந்து கொண்டு, வியந்து நின்றனராம்!

சித்தாந்த ரீதியாக, இவ்வியக்கம், புதியதாய் ஒன்றையும் சொல்லவில்லை. காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை, இது ஒரே நாடு. இங்கு ஜாதி, மொழி, மதம், மாகாணம் போன்ற வேற்றுமைகளிடையே, தேசியம், பண்பாடு, வாழ்க்கை முறை ஆகியவற்றால், ஒற்றுமை நிலவுகிறது. இந்த தாய்நாட்டை சக்தியின் வடிவமாக, பாரத அன்னையாக நேசிக்கிறோம், பூஜிக்கிறோம் என்ற பார்வையை சுவாமி விவேகானந்தர், பங்கிம் சந்தர் சட்டர்ஜி, அரவிந்த மகரிஷி, லோகமான்ய திலகர், சுப்ரமணிய பாரதி போன்றோர்கள் கூறிச் சென்றுள்ளார்கள்.

சில நுற்றாண்டுகளுக்கு முன், இந்த உண்மையை நாம் மறந்தோம். இந்த ஆத்ம மறதியின் காரணமாக, முகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டோம், சிதறுண்டோம். எனவே, மீண்டும் ஹிந்து தேசியத்தைத் தட்டியெழுப்பி, பலம் வாய்ந்த சமுதாயத்தை உருவாக்கி நாளை பாரதநாடு உலகின் குருவாய் ஆகிட வேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ்-ன் குறிக்கோள்.

உன்னதமான குறிக்கோளை அடையும் அறவழி முறையும், சங்கத்தின் செய்முறைகளும் தனித்தன்மை வாய்ந்தது.

## ஷாகா முறை

முழு மனிதனை உருவாக்குவதன் மூலமே நாட்டில் எல்லாப் பிரச்சனைகளையும் களையமுடியும் என்ற சுவாமி விவேகானந்தரின் கருத்திற்கேற்ப தேசப்பற்று, ஒழுக்கம், கட்டுப்பாடு, சமுதாய


விழிப்புணர்வு, சுயநலமற்ற தொண்டு மனப்பான்மை போன்ற உயர் பண்புகள் கொண்ட மனிதர்களை உருவாக்குவதன் மூலமே வீழ்ச்சியடைந்த பாரத நாட்டைத் தூக்கி நிறுத்த முடியும். இப்படிப்பட்ட தேசபக்தர்களை உருவாக்க ஷாகா (தினசரி கூடுதல்) என்ற உத்தியைக் கண்டறிந்தார் சங்க ஸ்தாபகர் டாக்டர் ஹெட்கேவார். ஆர்.எஸ்.எஸ். ஷாகாவில் உடல், உள்ளம், அறிவுக்கான பயிற்சியளிக்கப்படுகிறது.

இந்த ஷாகா முறையை ஆர்.எஸ்.எஸ்.-ன் மூச்சுக்காற்று எனலாம். இதில் உருவாகும் முழுமனிதர்களே நாட்டின் எல்லாப் பிரச்சனைகளுக்கும், சர்வரோக நிவாரணி போன்று, தீர்வுகாண முடியும் என்பது சங்கத்தின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

## ஒரு வித்தியாசமான ஸ்தாபகர்

பொது இடத்தில் ஒரு பத்து பேர்களிடம் காந்திஜி அல்லது நேருவைத் தெரியுமா? என்றுக் கேட்டுப்பாருங்கள். ''ஓ! தெரியுமே'', என்பார்கள். ''டாக்டர் ஹெட்கேவாரைப் பற்றித் தெரியுமா?'' எனக் கேட்டுப் பாருங்கள்; ''யாருப்பா அவர்?'' எனத் திருப்பிக் கேட்பார்கள். அவர்தான் ஆர்.எஸ்.எஸ் ஸ்தாபகர் டாக்டர்ஜி என்றழைக்கப்படும் பரம பூஜனிய ஹெட்கேவார் அவர்கள்.

சங்க ஸ்தாபகர் பூஜ்ய டாக்டர்ஜி மற்றும் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆகியோரின் நூற்றாண்டு விழா 1989-ல் நடந்து கொண்டிருந்தது.



நேருஜிக்கு அரசாங்கம் மட்டுமே விழா எடுத்தது. ஆனால் டாக்டர் ஹெட்கேவாரின் நூற்றாண்டு விழாவை பாரத சமுதாயமே கொண்டாடிக்கொண்டிருந்தது. அதுசமயம் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் முன்னால் துணைவேந்தர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் குறிப்பிட்டார். ''பிரபலமான பண்டிட் நேருவின் கொள்கைக்காக வாழ்பவர்களைப் பார்க்க இயலவில்லை. ஆனால் நான் ஆர்.எஸ்.எஸ். ஸ்தாபகரைப் பார்த்ததில்லை, அவரைப் பற்றியும் தெரியாது. விந்தை என்னவெனில்



அவரது கொள்கைக்காக வாழ்பவர்கள் நிறையப்பேரை நான் அறிவேன்''. ஆம். அவர் தன்னை முன்நிறுத்தவில்லை குறிக்கோளை முன் நிறுத்தினார்!

இராமாயண, மகாபாரத கதாபாத்திரங்களை நன்கறிவோம். அவற்றை எழுதிய வால்மீகி மற்றும் வியாசரை எத்தனை பேர் அறிவர்? அதுபோல் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் என்ற கோபுரத்தை எழுப்பிய டாக்டர்ஜி, கோயிலின் அஸ்திவாரக் கல்லாகத் தன்னை ஆக்கிக் கொண்டார்.

பிறவி தேசபக்தரான இவர், மருத்துவம் படித்திருந்தும் மருத்துவத் தொழில் பாராமல், பாரதமாதாவின் நாடியைப் பார்த்தார்.

**நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்**

என்பதற்கேற்ப, ''நம்மை அடிமைப்படுத்திய வெள்ளையர்களை எப்படி நாட்டைவிட்டு விரட்டுவது'', என்று பலர் சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில், ''வெள்ளையன் எப்படி நாட்டுக்குள் வந்தான், நாட்டை எப்படி அடிமைப்படுத்தினான்?'', என்று வித்தியாசமாக சிந்தித்தார் டாக்டர்ஜி! அதன் விளைவுதான் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தோற்றம்!

ஓலை குடிசைகள் நிறைந்த ஒரு தெரு வழியே போய் கொண்டிருக்கிறீர்கள். ஒரு வீட்டில் தீப்பிடித்து எரிகிறது. உடனே என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது சிலர் சொன்னார்கள் :

**முதலாமவர் :** தண்ணீர் கொண்டு வந்து தீயின்மீது இறைப்பேன்.

**இரண்டாமவர் :** மண்ணைவாரி எரிகின்ற தீயின் மீது போடுவேன்.

**மூன்றாமவர் :** உடனே தீயணைப்பு நிலையத்தைத் தொடர்பு கொண்டு அவர்களை வரவழைப்பேன்.

**நான்காமவர் :** பக்கத்து வீட்டிற்கு தீ பரவாமல் தடுக்க இருபுறமும் ஓலைகளை அகற்றிவிடுவேன்.

**ஐந்தாமவர் :** எரிகின்ற வீட்டினுள் புகுந்து, வீட்டிலுள்ள குழந்தைகள் மற்றும் வயது முதிர்ந்தோர்களைக் காப்பாற்றுவேன்.

இப்படி பலர் கூற, ஒருவர் ''தீ பல குடிசைகளில் பரவ வாய்ப்பிருக்கிறது. தனி ஆளாக தீயை அணைக்க முடியாது. எனவே தீ, தீ, தீ, ஓடியாங்க, ஓடியாங்க எனப் பலரையும் கூவி அழைத்து அவசரத்தையும்,

அவசியத்தையும் உணரவைப்பேன். இயற்கையாகவே பலரும் ஓடிவந்து, ஆளுக்கொரு வேலையைச் செய்து தீயை அணைப்பார்கள்.'' என்றார்.

ஆம், இதைத்தான் சங்க ஸ்தாபகர் செய்தார். ஜாதி, மொழி, மாகாண வெறி மற்றும், சுயநலத் தீ நாட்டைப் பற்றியபோது, முழு சமுதாயத்தைத் தட்டி எழுப்பி ஆத்ம மறதியிலிருந்து விடுபட்டு பொதுநல மனப்பான்மையோடு தேசம், தெய்வம் தருமம் காக்க அறைகூவல் விடுத்தார்.

நாகபுரியில் அவர் கொடுத்த அறை கூவல் இன்று நாடு முழுவதும் மட்டுமல்ல, உலகின் பல நாடுகளிலும் எதிரொலிப்பதை கேட்க முடியும்.

## தோற்றமும் வளர்ச்சியும்

பொதுவாக ஒரு கட்சி அல்லது அமைப்பைத் தொடங்க விரும்புபவர் அதன் பெயர், கொடி, அலுவலகம், தலைவர், செயலாளர் போன்ற விஷயங்களை முடிவு செய்து, மாநாடு போட்டு குறிப்பிட்ட தேதியில் இவற்றை அறிவிப்பார். ஆனால் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை ஸ்தாபித்த பூஜனீய டாக்டர் ஹெட்கேவார் அவர்கள் செப்டம்பர் 25, 1925-ல் விஜயதசமி அன்று நாகபுரியில் சில இளைஞர்களைக் கொண்டு சங்கத்தைத் துவங்கினார்.

குடும்பத்தில் குழந்தை பிறக்கிறது. சில நாட்கள் கழித்தே அதற்கு பெயர் சூட்டல், இத்தியாதி நடக்கிறது. அதே போன்றுதான் சங்கம் துவங்கி சில மாதங்களுக்குப் பிறகு பெயர் வைக்கப்பட்டது. ஹிந்து தர்மத்தின் சின்னமான காவிக்கொடி சங்கத்தின் குருவாக நிர்ணயிக்கப்பட்டது. அற்புதமான பிரார்த்தனை உருவாக்கப்பட்டது.

குடும்ப அமைப்பாக செயல்படும் சங்கத்தில் சேருபவர்களுக்கு சந்தா, உறுப்பினர் அட்டை என்று எதுவும் கிடையாது. தலைவர், செயலாளர் என்பது பதவிகளல்ல, பொறுப்புகளாகும்.

கடினமான சாலையானது திறமையான ஓட்டுநரையும், மோசமான வானிலை நல்ல விமான ஓட்டியையும் உருவாக்கும் என்பார்கள். ஆர்.எஸ்.எஸ். கடந்த 90 ஆண்டுகளாகக் கடந்து வந்த பாதை முட்கள் நிறைந்தது. எத்தனை பழிச்சொற்கள், முடக்க முயற்சிகள், தடைகள்! அத்தனையும் தாண்டி காலை முன்வைத்து இந்த சங்கம் எதிர் நீச்சல் போட்டு, இன்று வெற்றி கீதம் இசைத்தவாறு லட்சியக் கோவிலை நெருங்க, பீடுநடை போட்டுக் கொண்டுள்ளது. 1948, 1975, 1992ம் ஆண்டுகளில் சில பிரதமர்கள் சங்கத்தைத் தடைசெய்தார்கள். மக்கள்



சக்தியின் பின்னணியில் செயல்படுவதை உணர்ந்து தடைசெய்தவர்களே தடையை வாபஸ் பெற்றனர் என்பதை நாடறியும். காரணம் இது நெருப்பில் பூத்த மலர் அல்லது பீனிக்ஸ் பறவை.


கங்கோத்ரியில் தோன்றிவரும் கங்கை சிறுகச் சிறுகப் பெருகி கரடுமுரடான மலைப்பகுதிகளில் பீறிட்டுப் பாய்ந்து பாறைகளில் மோதி, பள்ளத்தாக்குகளில் விழுந்து ஒருவழியாகப் பிரவாகம் எடுத்து, நதியாக சமவெளியை அடைகிறது. இது முதல் நிலை.

அதன்பின் கலகல சலசலவென வளைந்து வளைந்து பாய்ந்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு பல்வேறு விதங்களில் உதவி, கடைசியாக கங்கா சாகர் என்னும் வங்காள விரிகுடாவில் சங்கமமாகிறது. இது இரண்டாம் நிலை.

அதுபோல், 1925 முதல் 1940 வரை பரமபூஜனீய டாக்டர்ஜி காலத்தில் அரசியல் சூழலில் பல்வேறு சாதக பாதக சூழ்நிலைகளைச் சந்தித்து மனிதனை உருவாக்கும் நோக்கில் முழு கவனத்தையும் செலுத்தி ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கம் ஒரு தனித்தன்மை வாய்ந்த பிரம்மாண்டமான இயக்கமாக மாறியது.

1940-ல் சங்கம் நாட்டின் எல்லா மாநிலங்களிலும் கிளைகளைக் கொண்டிருந்தது. ''நான் ஒரு சிறு பாரதத்தை தரிசிக்கின்றேன்,'' என டாக்டர்ஜி அவர்கள் நாகபுரியில் 1940ல் சங்க முகாமில் குறிப்பிட்டார். இது சங்க கங்கையின் முதல் நிலை.

1940-ல் பூஜனிய டாக்டர்ஜி காலமானார். காசி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றி, சங்கத்தின் உன்னதமான லட்சியம்



மற்றும் அறநெறிவழி நின்று செயல்படும் முறையை அறிந்து, சங்கத்தால் ஈர்க்கப்பட்ட, பரம பூஜனீய குருஜி கோல்வல்கர் அவர்கள் 1940-ல் சங்கத்தின் தலைவரானார்.

ஆன்மீகச் செல்வரான ஸ்ரீகுருஜி அவர்களின் 33 ஆண்டுகாலத் தலைமையில் சங்கம் பல்வேறு பரிணாம வளர்ச்சியைக் கண்டது. நல்ல மனிதர்களை உருவாக்கும் ஷாகா முறைக்கு சற்றும் குறையாத கவனம் செலுத்தப்பட்டது. அதே சமயத்தில் சங்க ஷாகாவில் பயிற்சிபெற்ற சங்க

ஸ்வயம்சேவகர்கள் மூலம் ஆக்கப்பூர்வமான சமுதாய மாற்றத்தைக் கொண்டுவரவும் ஸ்ரீ குருஜி அவர்கள் வழிகாட்டினார்.

மாணவர்களுக்காக அகில பாரத வித்யார்த்தி பரிஷத் **(ABVP)**, தொழிலாளர்களுக்காக பாரதீய மஸ்தூர் சங்கம் **(BMS)**, உலகம் முழுதும் பரவியுள்ள ஹிந்துக்களை, தார்மீக ரீதியாக ஒரு குடையின் கீழ் கொண்டுவர, விஸ்வ ஹிந்து பரிஷத் **(VHP)** போன்ற அமைப்புகள் உருவாக ஸ்ரீ குருஜி அவர்களின் வழிகாட்டுதல் கிடைத்தது.

அரசியலை சுயலாப நோக்கிற்காகக் கருதாமல், சேவை செய்வதற்கான ஒரு கருவியாகக் கொள்ள வேண்டும், மற்றும், அரசியல் வாழ்க்கையிலும் தூய்மை, சுயநலமின்மை, லட்சியப்பிடிப்பு ஆகியவை வேண்டும் என்பதற்காக, பாரதீய ஜனசங்கம் தோன்றுவதற்கு ஸ்ரீ குருஜி காரணமாயிருந்தார். இன்று பாரதீய ஜனசங்கம் பாரதீய ஜனதா கட்சியாக உருப்பெற்றுள்ளது.

1948-ல் ஜவஹர்லால் நேருவால் சங்கம் தடைசெய்யப்பட்டது. ஸ்ரீ குருஜி அவர்களின் ஆன்மீக வழிகாட்டுதலால் சங்கம் அறவழியில் போராடியது. பிரதமர் நேரு அவர்களே தடையை வாபஸ் வாங்கினார்.

1969-ல் விஸ்வ ஹிந்து பரிஷத்தின் உடுப்பி மாநாட்டில் தீண்டாமை குறித்த தீர்மானம் நிறைவேற ஸ்ரீ குருஜி காரணமாயிருந்தார்.

''ஹிந்து அனைவரும் சகோதரர்கள்
ஹிந்து எவருமே தாழ்ந்தவராகார்
ஹிந்துவைக் காப்பது என் விரதம்
சரிசமானமே எனது மந்திரம்'',

என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு ஹிந்து ஒற்றுமைக்காகவும், சமுதாய நல்லிணக்கத்திற்காகவும், பாடுபட்ட குருஜி அவர்கள் ஜூன் 1973-ல் அமரரானார். 33 ஆண்டுகள் அவரது தலைமையில் சங்கம் செயல்பட்டு பெரும் வளர்ச்சியைக் கண்டது. இது சங்க கங்கையின் இரண்டாம் நிலை.

சங்க ஸ்வயம்சேவகர்கள் இன்று பல்வேறு அமைப்புகள் மூலம் சமுதாய மாற்றம் முன்னேற்றத்தைக் கண்டு வருகிறார்கள். பாரதீய கிஸான் சங்கம், சுவிதேசி ஜாகரண் மஞ்ச், வித்யா பாரதி, சமஸ்கிருத பாரதி, ராஷ்ட்ரீய சிக்ஷக் மகாசங்கம், பாரதீய சிக்ஷண மண்டல், விஞ்ஞான பாரதி, பிரக்ஞா பிரவாஹ், வனவாசி கல்யாண் ஆஸ்ரம், பெண்களுக்காக ராஷ்ட்ர சேவிகா சமிதி, கிரீடா பாரதி, சீமா சுரக்ஷா, அகில பாரத கிராஹக் பஞ்சாயத் ஆகிய அமைப்புகள் சமுதாய



மாற்றத்திற்காகப் பணியாற்றி வருகின்றன. இதன் மூலம், விரைவில் பாரதம், உலகின் குருவாய் விளங்கும் என்பது, சங்கத்தின் லட்சியக் கனவாகும். இக்கனவு வெகுவாக நனவாகிக் கொண்டிருக்கிறது என்பதை, பல தருணங்களில் நாம் உணர்ந்து வருகிறோம். அதில் ஒன்றுதான் உலக யோகா தினம்.

சங்கம் இன்று பாரதம் முழுதும் வியாபித்துள்ளது என்பது மட்டுமல்ல, உலகின் பல்வேறு நாடுகளில் 630 கிளைகளைக் கொண்டுள்ளது.

ஆல விருட்சமாய் வளர்ந்துவரும் சங்கம் சமுதாயத்தின் அனைத்து அங்கங்களையும் இணைத்து, சங்கமே சமுதாயம், சமுதாயமே சங்கம் என்ற நிலை உருவாகும் காலம் தொலைவில் இல்லை.

## சிந்தாமல், சிதறாமல்......

யாரும் புரிந்து கொள்ள முடியாத மற்றொரு அதிசயம்!

தமிழகம் உள்ளடக்கிய நம் பாரத நாட்டில், கிட்டதட்ட எல்லா அரசியல் கட்சிகளும், ஜாதி சங்கங்களும், தொழிற்சங்கங்களும், சமூக அமைப்புகளும், தொடங்கப்பட்ட ஒரு சில ஆண்டுகளில், தலைவர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள், மன வேறுபாடுகளாக மாறுவதால், உடைகின்றன, பிளவுபடுகின்றன.

ஆனால், 1925-ல் துவங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். ஒரு கொடியின் கீழ், ஒரு தலைவனின் ஆணைப்படி, கட்டுக்கோப்பாக, ஒருங்கிணைந்து செயல்படுகிறது. சமூகவியல் ஆய்வாளர்களும், இயக்கவாதிகளும், இதன் காரணம் தெரியாமல் வியந்து நிற்கின்றனர்!

ஆனால் சங்கத்திலிருப்பவர்களுக்கு இது வியக்கத்தக்க விஷயமில்லை, ஏன்?

சங்கத்தில் தனிமனித வழிபாடு (Hero worship) கிடையாது. லட்சியம் ஒன்றே வழிபாட்டிற்குரியது.

தலைவருக்கு 'ஜே' கிடையாது. 'பாரத் மாதா கீ ஜெய்' தான் இங்கு பிரதானமானது. காவிக்கொடியே குரு, தலைவர் அல்ல. இதன் ஊழியர்கள் எந்த பதவியையும் வகிப்பதில்லை. மாறாக பொறுப்புகளை நிர்வகிக்கிறார்கள்.

## மாற்றுக் கருத்துடையோரையும் ஜீரணமாக்கும் சக்தி

ஒரு முறை சங்கத்தில் ஸ்வயம்சேவகனாய் சேர்ந்து விட்டால் கடைசி மூச்சுவரை சங்கத்திலிருப்பது ஒரு சாதாரணமான விஷயமாகும்.

அதே சமயம், சங்கத்தை விமர்சிக்கும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களும், திறந்த மனதோடு சங்கத்தைப் பார்த்து, மனம் மாறி, ஆதரவாளர்களாக மாறிய உதாரணங்கள் பலவுண்டு.

சங்க ஸ்தாபகர் பூஜ்ய டாக்டர் கேசவ பலிராம் ஹெட்கேவார் அவர்கள் சிறுவனாக இருந்தபோது, நாகபுரியில் சீதாபர்டி என்ற கோட்டையில் பறந்து கொண்டிருந்த யூனியன் ஜேக் (ஆங்கில அரசின்) கொடியை அகற்றுவதற்காகத், தன் நண்பர்களோடு சேர்ந்து ஒரு சுரங்கப் பாதையைத் தோண்டினார் என்பது அவரது வாழ்க்கை சம்பவம் ஆகும்.

வேகமாக வளர்ந்து கொண்டிருந்த சங்கத்தை, சட்ட ரீதியாகத் தடைசெய்ய வேண்டும் என அப்போதைய மத்திய மாகாண அரசு 1934ல் முயற்சி செய்து தோல்வியுற்றது என்பது சங்க சரிதத்தில் வரும் ஒரு சம்பவம் ஆகும்.

1989ல் டாக்டர்ஜியின் நூற்றாண்டு விழா, பாரதம் மற்றும் உலகின் பல நாடுகளில் கொண்டாடப்பட்டது. இங்கிலாந்து நாட்டின் விழாவில், இங்கிலாந்து பிரதமர் திருமதி தாட்சர் அம்மையார் கலந்துகொண்டு, டாக்டர் ஜி படத்திற்கு மாலை அணிவித்துச் சிறப்பு செய்தார்.

சங்கத்தை வளரவிடாது தடுக்க முயன்ற, ஆங்கில அரசின் பிரதமரே, சங்கத்தின் காவிக் கொடியை ஏற்றி சங்கத்தைப் பாராட்டினார் என்பது வியப்பான செய்தி ஆகும்.

நாடு சுதந்திரமடைந்த பிறகு நடந்த சில சம்பவங்களைக் காண்போம்,



ஜெயப்பிரகாஷ் நாராயண்

ஜெபி என்றழைக்கப்படும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் சங்கத்தை திட்டிவந்தவர். ''சங்க முகாம்களில் சீருடை அணிந்து, பல ஊர்களிலிருந்து முகாமில் ஒரு வாரம், ஒரு மாதம் எனத் தங்கி பயிற்சி பெறுகிறார்களே, இவர்களுக்கு லட்சக்கணக்கில் பணம் செலவாகுமே இதற்கெல்லாம் வெளி நாடுகளிலிருந்து பணம் வருகிறது!'' எனக் குற்றம் சாட்டுவார்.




ஆனால் சங்க ஸ்வயம்சேவகர்கள், சீருடை, போக்குவரத்துச் செலவு, உணவுக் கட்டணம் ஆகியவற்றை அவரவர்களே சொந்த பொறுப்பில் செய்து கொள்கிறார்கள் என்பதை நேரில் பார்த்துத் தெரிந்து கொண்ட ஜேபி அவர்கள், சங்கத்தை வெகுவாகப் பாராட்டத் தொடங்கினார். முழுமையான நல்ல புரட்சியை (சம்பூர்ண சங்கராந்தி) சங்கம் மட்டுமே செய்ய முடியும் எனக் குறிப்பிட்டார்.

அதே போல், சங்கத்தின் வளர்ச்சியைக் கண்டு, இதனால் தன் பதவிக்கு ஆபத்து வரக்கூடும் என பயந்து, சங்கத்தின்பால் பொறாமை கொண்ட பண்டிட் நேரு அவர்கள் ''சங்கத்தை அடியோடு நசுக்குவேன். பிரதமர் என்ற முறையில் அரசு இயந்திரத்தையும், தேவைப்படின், வெளிநாட்டு உதவியையும் பெற்று, சங்கத்தை தவிடுபொடியாக்குவேன். காவிக்கொடி பறந்திட ஒரு அங்குலம் நிலத்தையும் அனுமதியேன்'', என்றார். ஆனால் இன்று நாட்டில், நகரங்களிலும், கிராமங்களிலும், வனங்களிலும், மலைகளிலும், ஏன் வெளிநாடுகளிலும் கூட, காவிக்கொடி பட்டொளி வீசிப் பறந்துகொண்டுள்ளது!

எந்த சீனாவிடம் ''இந்தி-சீனி-பாயி-பாயி'' என நேரு அவர்கள் கொஞ்சிக் கொண்டிருந்தாரோ, அந்த சீனா திடீரென்று, 1962-ல் பாரதத்தின் மீது படையெடுத்தது. கடுமையான நெருக்கடி காலம். அத்தருணத்தில் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் இந்திய ராணுவத்திற்குப் பல்வேறு வகைகளில் உதவி புரிந்தனர். டில்லி போன்ற நகரங்களின் போக்குவரத்துக் கட்டுப்பாட்டினைப் பார்த்துக் கொண்டனர்.

ஸ்வயம்சேவகர்களின் நாட்டுப் பற்றையும், தியாக உணர்வையும் பாராட்டிய பிரதமர் நேரு அவர்கள், ஜனவரி 26, 1963ஆம் ஆண்டு



குடியரசு தின அணிவகுப்பில் சங்க ஸ்வயம்சேவகர்களின் அணிவகுப்பை அனுமதித்து சங்கத்தை கௌரவப் படுத்தினார்.

அதேபோன்று, ஆர்.எஸ்.எஸ். ஒரு வகுப்புவாத இயக்கம், அப்படி-இப்படி என்றெல்லாம் தூற்றிக் கொண்டிருந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், தமிழ்நாடு மீனாட்சிபுரத்தில் நடந்த ஒட்டுமொத்த மதமாற்ற நிகழ்ச்சிகளைக் கண்டு அதிர்ச்சி யடைந்தார். இந்த நாட்டில் ஹிந்து பெரும்பான்மை இருக்கும் வரைதான், இந்தியா ஒரு சமயசார்பற்ற, ஜனநாயக நாடாக இருக்க முடியும் என்று இந்திரா காந்தி தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாமல், அவசரநிலை விலக்கப்பட்டு, ஜனதா அரசுக்குப்பின் இரண்டாம் முறையாக திருமதி இந்திரா காந்தி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம். அவரது கடைசி காலகட்டத்தில், உடையாமலிருந்த ரஷ்யாவின் மாஸ்கோ நகரில் ஒரு மாபெரும் பொது நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார். பிரமாண்டமான உடற்பயிற்சிகளை, 'யங் பயனீர்' என்ற ரஷ்ய இளைஞர்கள் அமைப்பு, ஆயிரக்கணக்கானோர் செய்து காட்டியபோது, பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் அருகில் அமர்ந்திருந்த ரஷ்ய அதிபர் பிரஸ்னேவ் அவர்கள் தற்பெருமையாகக் கூறினார்:

''பார்த்தீர்களா மேடம்! எங்கள் இளைஞர்களின் சாகசம், கட்டுப்பாடு, கூட்டாகப் பயிற்சி செய்யும் நேர்த்தி, மிடுக்கான சீருடை எவ்வளவு பிரம்மாண்டமாக இருக்கிறது!''

திருமதி இந்திரா காந்தி அவர்கள்: ஆமாம், இந்த ஏற்பாட்டிற் காக எவ்வளவு செலவாயிற்று? யார் பணம் கொடுத்தார்கள்?

பிரஸ்னேவ் : "சீருடைக்காகவும், தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்த ஆசிரியர்களுக்காகவும், தொண்டர்களின் போக்குவரத்துக்காகவும், உணவுக் காகவும் எனது கம்யூனிச அரசு லட்சக்கணக்கான ரூபில் (ரஷ்ய கரன்சி) செலவு செய்துள்ளது." (காலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு ஒரு பெருமித சிரிப்பு)

இந்திராகாந்தி: தோழரே, எங்கள் நாட்டுக்கு ஒரு முறை வந்து பாருங்கள். ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பு இதைவிடக் கட்டுப் பாடாக பெரிய முகாம்களை நடத்துகிறது. சீருடை தரித்து, வாத்ய முழக்கங்களுடன் நடத்தும் அணிவகுப்பு ஊர்வலமும், மெய்சிலிர்க்க வைக்கும் உடற்பயிற்சிகளும், அவ்வளவு நேர்த்தியாக இருக்கும்!

நாட்டின் பல்வேறு மாகாணங்களில் ஆண்டுதோறும் நடக்கும் இந்நிகழ்ச்சிகளுக்கு அரசாங்கம் ஒரு சல்லிக் காசு கூட செலவிடு வதில்லை. அத்தனை விஷயங்களையும் சங்கத் தொண்டர்கள், சுய மாகவே செய்து கொள்கின்றார்கள்.



நாங்கள் உதவி செய்யாவிடினும் உபத்திரவமாக இல்லாமலிருப் பதே பெரிய விஷயம்.

ஆம், சங்கத்தை வெறுத்து வந்த இந்திராகாந்தி அவர்கள் கடைசி காலத்தில் சங்கத்தின் அவசியத்தை புரிந்து கொண்டார் என்பது உண்மை.

கேரளம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில், எதிர்ப்பு அலைகள், இன்று ஆதரவு அலைகளாக மாறிக்கொண்டிருக்கிறது.

''வெறுப்பின் அடிப்படையில் வேலை செய்யும் புயல் போன்ற கம்யூனிசத்தைவிட, அன்பின் அடிப்படையில் செயல்படும், தென்ற லைப் போன்ற ஆர்.எஸ்.எஸ். பரவாயில்லை'', என மக்கள் சிந்திக்கத் துவங்கிவிட்டனர்.

"போதும், போதும், உங்களோட கம்யூனிச அரசியல் போதும். நம் பையன் ஆர்.எஸ்.எஸ். ஷாகா போகட்டும்" எனக் கூறும் தாய்மார்களை இன்று கேரள மாநிலத்தில் பார்க்க முடியும். "உங்கள் கடவுள் எதிர்ப்புக் கொள்கைகளை, உங்களோடு வைத்துக்கொள்ளுங்கள். நம் பையன் தேச பக்தி மற்றும் தெய்வ பக்தியோடு வளர, ஆர்.எஸ்.எஸ். கிளைக்குப் போகட்டும்", எனக் கூறும் தாய்மார்களைத் தமிழ்நாட்டில் பார்க்க முடியும்.

2015 சங்க பயிற்சி முகாம், 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக சேலத்தில் நடந்தது. அதில் கலந்து கொண்ட ஆச்சியப்பன் என்ற பயிற்சியாளர் குறிப்பிட்டார்:

"இந்தப் பயிற்சியின் மூலம் உண்மையான சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் உணர்ந்தேன். தேசபக்தியும், தெய்வபக்தியும் எனக்குள் உண்டாயிற்று.

1970-ல் நடந்த தி.க. ஊர்வலத்தில் ராமர் படத்திற்கு செருப்புமாலை போட்டு, விளக்குமாற்றால் அடித்துசென்றவர்களில், நானும் ஒருவனாக இருந்தேன். அந்தப் பாவம் நீங்க, இந்த சங்க முகாம் பரிகாரமாக அமைந்தது."

அதே சமயம், 40 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கான முகாமின் தலைவராக இருந்த, ஓய்வு பெற்ற அரசு அதிகாரி, திரு.செல்வம் அவர்கள் குறிப்பிட்டார்:

''நான் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு கண்டபடி திட்டியிருக்கிறேன். ஆனால் இந்த 20 நாள் முகாமில் பங்குபெற்ற பின், சுயலமற்ற, தேசபக்தியும், தொண்டு மனப்பான்மை யும், ஒழுக்கமும், கட்டுப்பாடும் மிக்க இளைஞர்களைப் பார்த்த பிறகு, சங்கம் மிகச் சிறந்த இயக்கம் என்பதைப் புரிந்து கொண்டேன்.

இதற்குமுன், அப்பழுக்கற்ற இந்த இயக்கத்தைத் திட்டியதற்காக வெட்கப்படுகிறேன், மன்னிக்க வேண்டுகிறேன்''.

ஆம், இதுதான் உண்மை. ஆர்.எஸ்.எஸ். யாருக்கும் எதிரி அல்ல!

சில போலி மதச்சார்பின்மைவாதிகள், ஹிந்து தீவிரவாதம், காவி பயங்கரவாதம் என்றெல்லாம் தூற்றி வந்தனர். ஆனால், சங்கத்தை சமுதாயம் சரியாக புரிந்துகொண்டுள்ளது. சங்கத்தை திட்டியவர்கள் காணாமல் போய்விட்டார்கள்.


**தேவர்களே பொறாமைப்படும் (தேவ துர்லப)**
**ஆர்.எஸ்.எஸ் கார்யகர்தர்கள் (ஊழியர்கள்)**

சாதாரண சங்க ஊழியர்கள், அசாதாரணமான செயல்களைச் செய்ய வல்லவர்கள். சமுதாயப் பணிக்கு முன்னுரிமை வழங்கி, சங்க வேலைக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் இவர்கள், புயல், பூகம்பம், வெள்ளத்தால் சேதம், விமான-ரயில் விபத்துக்கள் போன்ற பேரிடர்கள் ஏற்படும் பொழுதெல்லாம், காக்கி நிக்கரை மாட்டிக்கொண்டு இடர் நேர்ந்த பகுதிக்கு ஓடோடிச்சென்று நிவாரணப் பணியில் ஈடுபடுவர். மோர்வி வெள்ளம், புஜ் பூகம்பம், ஹரியானா விமான விபத்து, ஆந்திர புயல், தமிழக சுனாமிப் பேரிடர், நேபாள பூகம்பம் இப்படி எத்தனையோ சந்தர்பங்களை சுட்டிக்காட்ட முடியும்.

''குஜராத்தில், மோர்வி வெள்ள பெருக்கின்போது பாதிக்கப் பட்ட, இஸ்லாமியர்களுக்கு முதலுதவி வழங்கவும், உயிரிழந்த முஸ்லீம்களின் சடலங்களை, அவர்கள் மத சடங்குகள்படி அடக்கம் செய்யவும் அவர்களை தோளில் சுமந்து சென்றவர்கள் ஆர்.எஸ்.எஸ். காரர்கள்'', என்று மெகா தொலைகாட்சியில், பிரதி தினம் காலை 7.30 மணிக்கு, வெற்றி நிச்சயம் என்ற நிகழ்ச்சியில், 01.06.2015-ல், கவின் கலைஞர், திரு.கனகு.சுப்புரத்தினம் அவர்கள் சொன்னது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆந்திர பிரதேச கடற்கரையோர கிராமங்களில், 1977 நவம்பரில், மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் சுழற்காற்று வீசியது. இதுவரை கண்டிராத பயங்கரமான புயல், பிரம்மாண்டமான பரப்பளவு நிலம், தண்ணீரில் மூழ்கியது. கடற்கரையோர மக்கள் அனைவருமே மிக மோசமாக பாதிக்கப்பட்டார்கள். 20,000 பேர் உயிரிழந்தார்கள். ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் வீடிழந்தார்கள். 30 அடி உயரத்திற்கும் அதிகமாக எழும்பிய ராட்சஸ அலைகள் எத்தனையோ கிராமங்களை அப்படியே துடைத்து அழித்துவிட்டன. மறுநாள் காலையில் பார்த்தால்,





ஆயிரக்கணக்கான சடலங்கள், ஊர் முழுவதும் சிதறிக் கிடப்பதைப் பார்க்க முடிந்தது. மனிதச் சடலங்களும், மிருகங்களின் சடலங்களும் திறந்த வெளியில் கிடந்தால், பெரிய அளவில் தொற்று நோய் பரவுவதற்கு வழி வகுக்கும். அரசும் மக்களும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றுவிட்டார்கள். செய்வதறியாமல் திகைத்தார்கள். அச்சமயம், சங்க ஸ்வயம்சேவகர்கள் தான் நிவாரணப் பணியை முனைப்புடன் துவக்கினார்கள்.

எங்கு பார்த்தாலும், ஸ்வயம்சேவகர்களே நிவாரணப் பணியில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது. பார்வையிட வந்த இந்திராகாந்தி அம்மையார் கூட, ''பாதிக்கப்பட்ட பகுதிகளில், ஆர்.எஸ்.எஸ். காரர்கள் பணிபுரிந்து கொண்டிருப்பதைத் தான் நான் பார்க்க முடிந்தது'' என்று காங்கிரஸ் கட்சிகாரர்களைக் கடிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது.

புயலால் அழிந்த கிராமங்களை, மறுபடியும் நிர்மாணிக்கும் பணியில் சங்கம் ஈடுபடலாயிற்று: அனாதையாக்கப்பட்ட சிறுவர் களுக்கு படிப்பு சொல்லித் தருவது, உயிர்தப்பிய மக்களுக்கு மறு வாழ்வளிப்பது போன்ற பணிகள் துவங்கின. வயது முதிர்ந்த சர்வோதயத் தலைவர் பிரபாகரராவ், ''தன்னலமற்ற தொண்டு புரிந்து வருகிற ஆர்.எஸ்.எஸ்.ஸிற்கு இனிமேல் **'Ready for Selfless Service'** என்ற புதிய பெயரைத்தான் சூட்டவேண்டும்'' என்று வியந்து கூறினார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்தவரான ஒரு அமைச்சர், ''ஆர்.எஸ்.எஸ். காரர்கள் மகத்தான பணி புரிந்து வருகிறார்கள்'', என்று சொன்னார். ''கடவுளின் பணியை, சந்தடியில்லாமல் நீங்கள் நிறைவேற்றி வருகிறீர்கள்'', என்று அரசு உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

1965-ல் நடந்த பாரத-பாக்கிஸ்தான் போரின் போது ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள், எல்லையில் நம் ராணுவ வீரார்களுக்கு, உயிரையும் துச்சமாகக் கருதி செய்த உதவிகளை, அப்போதைய பிரதமர் லால் பகதூர் சாஸ்த்திரி அவர்கள், பாராட்டிப் பேசியதை மறக்க முடியாது.

2011 ல் உத்தரகாண்ட் மலைப்பகுதிகளில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்காலும், நிலச்சரிவாலும், பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்களுக்கு, நாடுமுழுவதும் உள்ள ஸ்வயம்சேவகர்கள் நல்கிய நிவாரண உதவிகளை, நாளேடுகளும், தொலைக்காட்சிகளும் வியந்து பாராட்டின. மிக உயரமான மலைப்பகுதி ஒன்றில் இராணுவ வீரர்கள் வந்தடையும் முன்பாகவே, காக்கி நிக்கரில் நிவாரணப்பணி செய்துகொண்டிருந்த ஸ்வயம் சேவகர்களைப் பார்த்து, ஹெலிக்காப்டரிலிருந்து பார்வையிட்ட உயர் இராணுவ அதிகாரி, ''இவர்கள் இராணுவத்தில் எப்பிரிவை சேர்ந்தவர்கள்'' எனக் கேட்டாராம். இவர்கள் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் என்று அறிந்து வியந்து நின்றாராம்!

1975 அவசர நிலையை எதிர்த்து அறப்போராட்டம் நடத்திய சங்க ஊழியர்களின் அசாத்யமான துணிச்சலையும், தேசப் பற்றையும் ஜெயப்பிரகாஷ் நாராயணன், சோ.ராமசாமி, மொரார்ஜி தேசாய், ஜார்ஜ் பெர்னான்டஸ் போன்றோர்கள் வியந்து பாராட்டினார்கள்.

ஒருமுறை எகிப்திலிருந்து டெல்லி வந்துகொண்டிருந்த விமானம் மற்றொரு விமானத்துடன் ஆகாய மார்க்கத்தில் மோதி ஹரியானா மாநிலத்தில் விழுந்தது. அதில் மரணமடைந்த இஸ்லாமியர்களை, அவர்களின் மதச் சடங்குகளின்படி அடக்கம் செய்தவர்கள், சங்க ஸ்வயம்சேவகர்கள். இக்காட்சியைப்பார்த்த அப்போதைய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் இப்ராஹிம் அவர்கள் குறிப்பிட்டார், ''நான் இதுவரை சங்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்தேன். இன்று இவர்களின் மனிதாபிமானச் செயலைக் கண்டு, இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. உண்மையாகவே சங்கம் ஒரு தன்னலமற்ற தொண்டு அமைப்பாகும்''.

விலைக்கு வாங்க முடியாத, நம்பத்தகுந்த, சுயநலமற்ற, தியாக மனப்பான்மை கொண்ட, ஒருங்கிணைந்து செயல்படும் திறமை கொண்ட, ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களை, ''தேவ துர்லப'' என்றால் மிகையாகாது.

என் சங்க வயது 40,50,60 என பெருமைப்பட்டுக் கொள்ளும் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள், வாழ்நாள் முழுவதும் சங்கப் பணியாற்றுவதில் சித்தமாயிருக்கிறார்கள். ''கடைசி மூச்சுவரை பொதுவாழ்வில் ஈடுபடுபவர்களை, சங்கத்தில்தான் பார்க்க முடிகிறது'', என்று, அவசரநிலை அகன்றபின், டெல்லியில் ஒரு பைடக்கில் கலந்து கொண்ட திரு.ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள், மகிழ்ச்சியோடு குறிப்பிட்டார்.



## ஒரு வேடிக்கையான சம்பவத்தைப் பாருங்கள்!

ஒருநாள் மாலை நேரம். ஒரு கல்யாண ஊர்வலம் மேளதாளத் துடன் வந்து கொண்டிருக்கிறது. அலங்கரிக்கப்பட்ட வண்டியில் புதுப்பெண்-மாப்பிள்ளை, உல்லாசமாக பவனி வருகிறார்கள் வீட்டுமாடியின் முற்றத்திலிருந்து, ஒரு சங்கசாலக் (பிரபல வியாபாரி), தனது மனைவியுடன் ஊர்வலத்தைக் கண்டுகளித்துக் கொண்டிருக்கிறார். இருவரும் மலரும் நினைவுகளால் தன்னிலை மறக்கிறார்கள். மணப்பெண்-மாப்பிள்ளை ஸ்தானத்தில் தங்களை பாவித்துக் கொள்கிறார்கள்! இயற்கைதானே இது!

கல்யாண ஊர்வலம் கடந்து சென்று விட்டது. பரவச நிலையிலிருந்த அந்த அம்மா, ''என்னங்க, கல்யாணமாகி இத்தனை வருஷத்துல, ஷாகா, பைடக், வர்க, சாங்கிக், பிரவாஸ், சங்க முகாம் இப்படியே சுத்திகிட்டிருந்தீங்க. இனிமேல் எனக்காக நேரம் ஒதுக்குங்க! சங்க வேலை போதுமுங்க! இனிமே இளைஞர்கள் பார்த்துக் கொள்ளுவாங்க'', என திருவாய் மலர்ந்தார்கள்.

திகைத்து நின்ற தன் கணவனை, உணர்ச்சிப் பூர்வமாக மடக்க முயன்ற அம்மா, தொடர்ந்தார்: ''பாருங்க, அக்னி சாட்சியாக, வாழ்நாள் முழுதும் கண்கலங்காமல் சகதர்ம பத்தினியாகப் பார்த்துக் கொள்வேன் என்று சொல்லி என் கழுத்தில் தாலி கட்டினீங்க. இவ்விரதத்தைக் காப்பாற்றவேணும் தெரிஞ்சுக்கோங்க!''.

மலைத்து நின்ற சங்கசாலக்கிற்கு அருமையான ஒரு பாய்ன்ட் கிடைத்தது. ''பாரும்மா, நீ சொல்வது முற்றிலும் சத்தியமானது. ஆனால் உன்னைக் கைப்பிடிப்பதற்கு முன்பு சங்கத்தில், அக்னி வடிவத்திலுள்ள காவிக் கொடிக்கு முன்பு, சங்க காரியத்தை உண்மையோடும், உடல், மனம், பொருள் அனைத்தாலும் செய்வேன். இவ்விரதத்தை நான் வாழ்நாள் முழுதும் அனுஷ்டிப்பேன், என்று விரதம் ஏற்றுள்ளேன். இரண்டில் எந்த விரதத்தைக் கைவிடுவது? என்னைப் பொறுத்தமட்டில் இரண்டு விரதங்களுமே முக்கியமானது. உன்னையும், சங்கத்தையும் எனது இரு கண்களாகப் போற்றுகிறேன்,'' என ஒரு போடு போட்டார்!

''என்னமோ பண்ணுங்கோ, உங்களைத் திருத்த முடியாது. சங்கம் தான் உங்களுக்கு முதல் பொண்டாட்டி, நான் இரண்டாம் தாரம்தானே!'' என சிணுங்கினார் அவரது மனைவி!

''கண்ணம்மா, ஒன்னு தெரிஞ்சுக்கோ, ஆர்.எஸ்.எஸ். எனக்கு முதல் மனைவி மாதிரி தான். ஆனால் முதல் மனைவியைவிட

ஒருவனுக்கு இரண்டாம் மனைவியிடம்தான் பிரியம் அதிகமாக இருக்கும்!'', என மனைவியைத் தேற்றினார்! இதுதான் ஆர்.எஸ்.எஸ். கார்யகர்த்தர்களின் மனநிலை!

2014 நவம்பர் 9ம் தேதி தமிழ்நாட்டின் மாவட்ட தலைநகரங்களில் வாத்திய இசையுடன் அணிவகுப்பு ஊர்வலம் நடத்த ஆர்.எஸ்.எஸ். அனுமதி கேட்டிருந்தது. காவல் துறை மறுக்க, சங்கம் நீதிமன்றத்தை நாடியது. வாத்திய இசை எழுப்பாமல் அணிவகுப்பு ஊர்வலம் நடத்த நீதிமன்றம் அனுமதி அளித்தது. ஆனால் கடைசி நிமிடத்தில் சீருடை அணிந்து ஊர்வலம் நடத்த காவல் துறை மறுப்பு தெரிவித்தது.

பனியில்லாத மார்கழியா, படையில்லாத மன்னவனா

என்பதுபோல, ''சீருடையில்லாத அணிவகுப்பா''? என்று எண்ணி எல்லா இடங்களிலும் ஆயிரக்கணக்கான ஸ்வயம்சேவகர்கள் அணிவகுப்பில் கலந்து கொண்டனர்.

''உங்கள் அனைவரையும் கைது செய்கிறோம்'', என காவல் துறை அதிகாரிகள் கூறியபோது, கட்டுப்பாட்டுடன், ''பாரத் மாதா கீ ஜெய்'' கோஷம் எழுப்பிக்கொண்டு, சங்கத்தினர் காவல் துறை வாகனங்களில் ஏறினர்.

இவர்களின் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் ஒத்துழைப்பையும், கண்டு காவல்துறை அதிகாரிகளும், பொதுமக்களும் புருவங்களை உயர்த்தினர்!'

2015-ல் சேலத்தில் நடந்த 20-நாள் பண்பு பயிற்சி வகுப்பை ஒட்டி, முக்கியஸ்தர்களைக் கொண்ட, ஒரு வரவேற்பு குழு அமைக்கப்பட்டது.

''சங்கத்தின் அகிலபாரதத் தலைவர் அல்லது பொதுச்செயலாளர் முகாமிற்கு வருகிறார்களா?'' என ஒருவர் கேட்க, 'இல்லை' என்ற பதில் கொடுக்கப்பட்டது.

'' அப்படியென்றால் யாரை வரவேற்க இந்த வரவேற்புக்குழு?' என்ற கேள்வி எழுந்தது.

''சீருடை, போக்குவரத்துசெலவு, முகாம் கட்டணம் ஆகிய வற்றைத் தன் சொந்த பொறுப்பில் ஏற்றுக் கொண்டு, 20 நாட்கள் விடுமுறை எடுத்துக்கொண்டு, முகாமில் பயிற்சி பெற்று, முகாம் முடித்து ஊர் திரும்பியவுடன் சங்க வேலையை திறம்படச் செய்ய வேண்டும் என்ற தேசப்பற்றோடு, முகாமிற்கு வரும் சாதாரண பயிற்சியாளர்களைத்தான் வரவேற்க உள்ளோம்'', என்ற வித்தியாசமான விளக்கத்தைக் கேட்டவுடன் அனைவரும் வியந்து மகிழ்ந்தனர்.




ஒரு தனியார் நிறுவனத்தின் மேலாளர் திரு.செந்தில் என்பவர், ''அப்படியானால் நான் முகாமிற்கு வந்து பயிற்சியாளர்களின் காலில் விழுந்து வணங்க விரும்புகிறேன்'' எனக் கூறினார்.

ஆம்.

''அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி,
அகத்திலே அன்பினோர் வெள்ளம்;
பொறிகளின் மீது தனியரசாணை
பொழுதெலாம் நினது பேரருளின்
நெறியிலே நாட்டம் கர்ம யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை அருளாய்,
குறிகுணமேதும் இல்லதாய் அனைத்தாய்
குலவிடு தனிப் பரம் பொருளே''.

என்று இறைவனை வேண்டி, சமுதாய வேலை செய்யும் சங்க ஊழியர்களின் அதிசயங்களை, இங்குதான் பார்க்க முடியும்.



(பாரதியார்)

## பிரசாரக் முறை

தினசரி ஒருமணி நேரம் ஷாகா, மேலும் மக்கள் தொடர்புக்கும் சேவைப் பணிகளுக்கும் இரண்டு மூன்று மணி நேரம் ஒதுக்கும் எண்ணற்ற சங்க ஊழியர்கள், இது ஒருபுறம்.

சங்கப்பணியை வாழ்க்கைப் பணியாக **(Life mission)** எடுத்துக் கொண்டு முழுநேர ஊழியர்களாக வாழ்வை அர்ப்பணம் செய்து கொண்டுள்ள, பல்லாயிரக் கணக்கான பிரச்சாரகர்கள் மறுபுறம்.

அவசர நிலை வாபசாகி, ஜனதா கட்சி, மத்தியில் ஆட்சிக்கு வந்த போது சென்னையில் 1978-ல் ஒரு சங்க ஊழியர்களின் பைடக் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட துக்ளக் சோ அவர்கள்,

''ஆர்.எஸ்.எஸ்.-ன் ஹிந்து ராஷ்ட்ரக் கொள்கையையும், தினசரி ஷாகா முறையையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், பதவி, புகழ், எனக்கென்ன கிடைக்கும் என்ற சுயநலத்தில் அலையும் கும்பல்களிடையே பெயர், புகழ் எதிர்பாராது, எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டு, பிரச்சாரகர்களாக வேலைசெய்யும் முறையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இது விந்தையாகவும், அதிசயமாகவும் இருக்கிறது!'', எனக் கூறினார்.

அக்கூட்டத்தில் கலந்து கொண்ட நாவலாசிரியர் தீபம் பார்த்தசாரதி போன்றோரும், பிரசாரகர்களின் தியாக உணர்வை கண்டு ஆச்சரியம் அடைந்தனர்.

சங்கப்பணி, தேசியப்பணி மற்றும் தெய்வீகப் பணி. எனவேதான்,

''செல்வத்தைத் தந்தேன், உடல் உழைப்பினைத் தந்தேன்,

திறமைகளனைத்தும் உனக்கே அர்ப்பணம் செய்தேன்!

என்ன தந்த போதும் மனம், அமைதியற்றதால், - குருவே!

உந்தன் பாதத்தில் இன்று நானே அர்ப்பணம்''

என தேசப்பணியாம் ஹோமகுண்டத்தில், ஆகுதியாக்கிக் கொள்ளும் தூய மலர்களாய், பல இளைஞர்கள் முழு நேர ஊழியர்களாகச் சுடர் விடுகிறார்கள்.

தீண்டாமை, வரதட்சணை, குடிப்பழக்கம், ஜாதியம் போன்ற சமுதாயக் கொடுமைகளுக்கு இரையாகாமல், மனதில் தூய்மை, வாக்கில் இனிமை, செயலில் நேர்மை ஆகிய பண்புகளோடு, சங்க நெறிதனில் கடுகி ஏகிடும், கார்யகர்த்தர்களைப் பார்ப்பது அதிசயமான விஷயமல்லவா?.

1980-ல் திருவேடகம் விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாமின் நிறைவு விழாவில் ஆசியுரை வழங்கிய பூஜ்ய சித்பவானந்தா சுவாமிகள், சங்க ஸ்வயம்சேவகர்களைப் பார்த்து ''நீங்கள் பாக்கியவான்கள்; சுவாமி விவேகானந்தரின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்'', எனக் குறிப்பிட்டார்.

## ஆத்மார்த்த உறவுமுறை


ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி போன்ற வித்தியாசம் பாராமல், ஒருதாய் (பாரதத்தாய்) மக்களாய், சகோதரர்களாய், தொடர்ந்து அன்போடும் நேசத்தோடும், சங்க ஊழியர்கள் வேலை செய்யும் விந்தை என்ன?.

உள்ளார்ந்த அன்பு, ஆத்மார்த்தமான உறவுமுறை, Heart to Heart approach, பரஸ்பர நம்பிக்கை, சார்புத் தன்மை (Dependability) ஆகிய உன்னத பண்புகளே, சங்க ஊழியர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடுவதற்குக் காரணம்.

தூய்மையான அன்பின் வெளிப்பாட்டிற்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு:

1993-ல் சென்னை காரியாலயம் பயங்கரவாதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. 11 இன்னுயிர்கள் பிரிந்தன. சோகமான





சூழல். அப்போது சங்கத்தின் அகில பாரதத் தலைவர் பரம பூஜனீய பாளாசாகேப் தேவரஸ் அவர்கள். உடல்நலக் குறைவால் நாகபுரியில் படுத்த படுக்கையாயிருந்தார்.

சென்னையில் நடந்த துயரச் செய்தியைக் கேள்விப்பட்டவர், மிகுந்த துக்கமடைந்தார். சென்னை சென்று கார்யகர்தர்களைச் சந்தித்து, கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும், எனத் தீர்மானித்ததார். மருத்துவர்கள் தடுத்தும் அதை பொருட்படுத்தாமல் விமானம் மூலம் சென்னை புறப்பட்டார்.

இவரது பலவீனமான உடல்நிலையைக் கண்ட விமானப்பணிப் பெண்கள், இவர்மீது பரிவுகொண்டு, அக்கறையோடு கவனித்துக் கொண்டனர். விமானம் சென்னை காமராஜர் விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு முன்பாக, அப்பெண்கள், ''ஐயா, தாங்கள் எந்த மருத்துவமனைக்குச் செல்கிறீர்கள்? அப்பல்லோவா, ராமசந்திரா மருத்துவமனையா,'' என கருணையோடு கேட்டனர்!

''மகளே, நான் ஆர்.எஸ்.எஸ். தலைவர். சென்னை காரியாலயத்தில், வெடிகுண்டு விபத்தில் எனது உயிருக்கும் உயிரான ஊழியர்கள் சிலர் காலமாகிவிட்டனர். அவர்களது உறவினர்கள் மற்றும் சங்க ஊழியர்களிடம் துக்கம் விசாரிக்கச் செல்கிறேன்'', என்று தழுதழுத்தக் குரலில் கூறிவிட்டு கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கொண்டார், ஸ்ரீ தேவரஸ்ஜி.

விமானப் பணிப்பெண்களின் கண்கள் குளமாயின. ஈரமான நெஞ்சத்தைப் பார்த்தவர்களின் நெஞ்சமும் ஈரமாகுமல்லவா?

## உடன்பாடான அணுகுமுறை :

மகாத்மா காந்திஜியின் படுகொலை சம்பவத்தைக் காரணமாக வைத்து சங்கத்தின் மீது பொறாமை கொண்டிருந்த பிரதமர் நேரு அவர்கள் 1948-ல் சங்கத்தைத் தடை செய்தார்.

''காந்தி கொலைக்கும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை, சங்கம் அப்பழுக்கற்ற சேத பக்த இயக்கம்.'' என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அரசு தடையை நீக்கிய பிறகு சிறையிலிருந்து விடுதலையான பூஜ்ய ஸ்ரீ குருஜி அவர்கள் (சங்கத்தின் தலைவர்), நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

அபாண்டமான பழியை சுமத்தி நூற்றுக்கணக்கான சங்க ஊழியர் களை சிறையிலிட்டு, சித்திரவதை செய்த மத்திய அரசை எதிர்த்துப் போராட வேண்டுமென பலர் ஸ்ரீ குருஜியிடம் கோரினார்கள்.

ஆனால், ஆன்மிகச் செல்வர் ஸ்ரீகுருஜி கூறிய வியப்பான செய்தி என்ன தெரியுமா?

''பல்லாண்டு போராடி சுதந்திரம் பெற்று சொந்த ஆட்சி அமைந் துள்ளோம். நாட்டின் பொருளாதாரம் மற்றும் பன்முக வளர்ச்சியை மனதிற்கொண்டு அரசு செய்த தவற்றை மறப்போம், மன்னிப்போம்.

சிலசமயம் சாப்பிடும்பொழுது, நமது பற்கள் நாவைக் கடித்து விடுகின்றன. பற்களைத் தட்டி எறிந்து விடுகிறோமோ என்ன?''.

ஆம், தவறிழைப்பது மனித இயல்பு, மன்னிப்பது தெய்வ இயல்பு **(To err is human, forgive divine)** என்ற கூற்றை மெய்ப்பித்தது, ஸ்ரீ குருஜியின் வார்த்தைகள்.

1975ல் பிரதமர் இந்திரா காந்தி தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள அவசர நிலையை பிரகடனம் செய்தார். **MISA, DIR** சட்டங்கள் பல தலைவர்கள் மீது பாய்ந்தன. சங்கம் மற்றும் சில அமைப்புகள் தடைசெய்யப்பட்டன. அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன.

இருண்ட அந்த சூழ்நிலையில், துணிந்து நின்று அறப்போராட் டங்கள் மூலம் மக்கள் சக்தியை எழுப்பச் செய்தது ஆர்.எஸ்.எஸ்.

இங்கும் சங்கத்தின் அணுகுமுறை, அறவழியில்தான் அமைந்தது.



## செய்வனத் திருந்தச் செய்யும் பாங்கு

செய்வன திருந்தச் செய் என்ற தமிழ் சொல்லுக்கேற்பவும், யோக கர்மசு கௌசலம் என்ற சமஸ்கிருதச் சொல்லிற்கு ஏற்பவும், சங்கத்தினர், எந்த செயலையும் திட்டமிட்டு, திட்டத்தை செவ்வனே நிறைவேற்றுகின்றனர்.

கீதாஞ்சலியில் ரவீந்திரநாத் தாகூர், ஒரு கவிதையில், முழுமையை வலியுறுத்தும் பொழுது இவ்வாறு கூறுகிறார் :

"Where the tireless striving, stretches its arms towards perfection.........".

இதற்கு சங்க ஸ்தாபகர் பூஜ்ய டாக்டர்ஜியின், ஒரு வாழ்க்கை சம்பவம் நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

ஒரு முறை, நாகபுரியில் ஒரு சிபிர் நடைபெற்றது. ஊழியர்கள் தங்கு வதற்காக பெரிய பந்தல் நிர்மாணிக்கப்பட்டது. சிபிர் துவங்குவதற்கு முதல் நாள் இரவு, டாக்டர்ஜி பந்தலைப் பார்வையிட்டார். பல வரிசை களில், ஒரு வரிசையிலிருந்த பந்தல்கால் ஒன்று, சற்று வலதுபுறம் தள்ளி நடப்பட்டிருந்தது. வரிசை சீராக இல்லை. இதைப்பார்த்த டாக்டர்ஜி, ஒரு ஸ்வயம்சேவகரைக் கூப்பிட்டு, அதைப் பிடுங்கி நேர் வரிசையில் நடும்படி கூறினார். ஒரு கம்பம் சற்று விலகி இருப்ப தால் என்னவாகப் போகிறது என்றுகூட சிலர் நினைத்தனர். ஆனால் டாக்டர்ஜியின் அன்பு வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த நாள் துவக்க விழாவில் தலைமை உரையாற்றிய நாகபுரி மேயர் அவர்கள், ''சங்கத்தில் எல்லாம் கட்டுப்பாட்டுடனும், சீராகவும் செய்யப்படுவது எனக்குப் பிடித்திருக்கிறது. செருப்புகள், வாகனங்களெல்லாம் வரிசை வரிசையாக விடப்பட்டுள்ளன. சங்க ஊழியர்களும் வரிசையாக, நிமிர்ந்து நேர்த்தியாக அமர்ந்துள்ளீர்கள் பந்தல் கால்கள் கூட, அனைத்தும் வரிசையாக நூல் பிடித்தாற்போல நடப்பட்டுள்ளன. இந்த நேர்த்தியைப் **(perfection)** பாராட்டு கிறேன்'', என்று குறிப்பிட்டபோது, அனைவரும் வியந்துவிட்டனர்.

**Pefection is not a small thing, but small things make perfection** என்பது இதன் மூலம் விளங்குகிறது.

வேலூரில் ஒரு அரங்கில் சங்கத்தின் பௌதிக் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்வழியே, ஒரு கல்வித்துறை யில் பணிபுரியும் அலுவலர் சென்றபொழுது, வாகனங்கள் வரிசை யில் நிறுத்தப்பட்டிருப்பதையும், செருப்புகள் வரிசையாய் விடப்பட்டி ருப்பதையும் பார்த்து அசந்து போனார். இவ்வளவு அழகான நிகழ்ச்சியா? பார்ப்போம் என்று அரங்கத்தை எட்டிப்பார்த்தார்.

நேர்வரிசைகளில், நிமிர்ந்து அமர்ந்து கொண்டு ஒரு சங்க அதிகாரி பேசுவதை அனைவரும் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அழகிய ஏற்பாட்டில் கவரப்பட்ட அவரும், அமர்ந்து பேச்சைக் கேட்டார். சூழ்நிலையும், கருத்துக்களும் பிடித்தன. தொடர்ந்து சங்க நிகழ்ச்சிகள், ஷாகா, என ஸ்வயம்சேவக் ஆனார். இன்று வேலூர் ஜில்லாவின் சங்க தலைவர் (மானனீய ஏழை முனுசாமி அவர்கள்) ஆகிவிட்டார்.

சங்கஸ்தானையும், கொடிவட்டத்தையும் சுத்தம் செய்வதில், சங்கஸ்தாபகரே முன்னுதாரணமாக ஈடுபடுவதைப் பார்த்து, மற்ற ஸ்வயம் சேவகர்களும் இடத்தை சுத்தம் செய்வர். ஒரு வேளை, ஸ்வயம்சேவகரான பிரதமர் மோடிஜிக்கு, ஸ்வச்ச பாரதம் கற்பனை, ஸ்வச்ச சங்கஸ்தான் கற்பனையில் இருந்துதான் வந்ததோ!.

## காலம் மாறிப்போச்சு:

காலம் மாறிப்போச்சு, காலம் மாறிப்போச்சு - இது ஒரு பாட்டியின் பல்லவி.

எப்படி பாட்டி காலம் மாறிப்போச்சு ?, பேரன் கேட்டான்.

"எங்க காலத்துல அடிவாங்கினவன் வலியால் 'ஆ, ஊ' எனக் கத்துவான்! இந்தக் காலத்தில் அடி கொடுப்பவன் 'ஆ, ஊ" எனக் கத்துகிறான்!"

"எங்க காலத்துல செக்குல அம்மி சுழலும், இன்றைக்கு கிரைண்டரில் அம்மி அப்படியே இருக்கு, செக்குச் சுழலுது!."

"அக்காலத்துல, வாத்தியார் உட்கார்ந்து பாடம் நடத்துவார், பையன் கைகட்டி நின்றுகொண்டு பவ்யமாகப் பாடம் கேட்பான். இக்காலத்துல, கால்மேல் கால் போட்டு பையன் உட்கார்ந்திருக்க, பாவம், வாத்தியார் நின்னுகிட்டுப் பாடம் நடத்துகிறார்! காலம் மாறிப்போயிட்டதுதானே?" இது பாட்டியின் வாதம்.

உண்மைதான். பல அமைப்புகளின் கொள்கைகள் நீர்த்துப் போய் விட்டன. தனி திராவிடநாடு, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, பிறகு எப்படியாவது ஆட்சியில் பங்கு, என்றெல்லாம் காலம் மாறுகிறது அல்லவா? கொள்கைகள் நீர்த்துப் போகின்றன அல்லவா?

ஆனால், "பாரதம் ஒரு ஹிந்து நாடு, ஹிந்து மக்கள் சொந்த நாடு" என்று சங்க ஸ்தாபகர் கொண்ட அதே கொள்கைத் தெளிவு, இன்றும் நிலவுகிறது. சீருடை, உடற்பயிற்சி, போன்ற புறமாற்றங்கள் ஏற்படலாம். அடிப்படை தத்துவத்தில் சமரசத்திற்கே இடமில்லை. சற்றும் பிறழலாமல், உறுதியுடன், ஹிந்து ராஷ்ட்ர லட்சியத்தை சங்கம் பின்பற்றி வருகிறது.



1925-ல், ஸ்தாபகர் டாக்டர்ஜி அவர்கள், ஹிந்து ராஷ்ட்ரம் என்ற பாணத்தை ஏவினார். பலர், இதை எதிர்த்துப் பல்வேறு எதிர் பாணங்களை விட்டனர். அனைத்து பாணங்களையும் முறியடித்து இன்று சங்கபாணம் வெற்றியடைந்துள்ளது.

அதாவது, கருத்துப்போரில் (war of ideals) சங்கக் கருத்துக்களுக்கு இன்று சமுதாயத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஹிந்து ஒற்றுமை ஏற்படுத்துவது தவளைகளை தராசு தட்டில் எடைபோடுவதுபோல் இயலாத செயல் என்றனர். இன்று ஹிந்து ஒற்றுமை சாத்தியமாக உள்ளது ?

தமிழக முதல்வராக இருந்த கலைஞர் மு.க. அவர்கள், ஒருமுறை சங்கத்தை பற்றிப் பேசும்போது, "ஆர்.எஸ்.எஸ். விதை திராவிட மண்ணில் வேரூன்ற முடியாது. அதன் கிளைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக தென்படுகிறது" என ஏளனமாகக் குறிப்பிட்டார்.

ஆனால், 1980- களில், ஹிந்து விழிப்புணர்வு ஏற்பட்டு, சங்க கிளைகள் தமிழகம் முழுவதும், பரவலாகவும், வேகமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கலைஞர் சொன்னார்: "தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் பரவி வருகிறது"! காலம் மாறித்தான்விட்டது!

முதலாளித்துவம், பொதுவுடமை, சோசலிசம் போன்ற தத்துவங்கள் உலக அமைதியையும், சகோதரத்துவத்தையும், மனித நேயத்தையும் நிலைநாட்ட முடியாமல் போனபோது, 'ஹிந்துத்துவம் அவற்றை சாதிக்க முடியும்', என்பது தெளிவாகி உள்ளது. உலகம் ஒரு குடும்பம், உலக மக்கள் அனைவரும் இறைவனின் குழந்தைகள், எனவே, உலக சகோதரத்துவம் சாத்தியம், "வேற்றுமையில் ஒற்றுமை என்ற நோக்கில், அனைவரும் இசைவோடு, இணைந்து வாழ முடியும்" என்ற ஹிந்து சிந்தனை, அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது, பாராட்டைப் பெற்றுள்ளது என்பதே நிதர்சனம்!.

## சங்க சாதனைகள்

இத்தனை ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். என்ன சாதித்தது (கிழித்தது) என்று கேட்பவர்கள் சங்க சாதனைகளைக் கேட்டும், கண்டும் ஆழ்ந்த வியப்பில் ஆழ்கின்றனர்.

கோவில், பள்ளி, சாலைகள் போன்றவைகளை உருவாக்கினால் அவைகள் கண்களுக்குப் புலப்படும். மாறாக, ஆர்.எஸ்.எஸ்.ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள், காட்சிக்கு அப்பாற்பட்டவை (Abstract). சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

ஹிந்து என்பது ஒரு பழிச்சொல், ஹிந்து நாடு என்பது பகற் கனவு, ஹிந்து ஒற்றுமை என்பது தவளைகளைத் தராசில் எடைபோடுவது போன்றதாகும், என்றெல்லாம் கேலி பேசினார்கள். மெத்தப்படித்த, காங்கிரஸ் தலைவர் மோதிலால் நேரு அவர்கள் ''என்னை கழுதை என்று கூட அழையுங்கள், ஆனால் ஹிந்து என்று மட்டும் சொல்லாதீர்கள்,'' என்றெல்லாம் கூறி, ஹிந்து என்ற சொல்லை பழிச்சொல்லாக்கினார்.

சங்கம் தொடர்ந்து ஹிந்து விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டு வந்ததன் விளைவாக, இன்றையதினம், ''ஹிந்து என்பதில் பெருமிதம் கொள்வோம்'', என்ற சுவாமி விவேகானந்தரின் முழக்கம், இன்று நாட்டின் திக்கெட்டும் ஒலிக்கிறது.

இன்னும், ஒருசில சங்க சாதனைகளைக் காண்போம்.

1971-ல் வங்காள தேசம் உருவாகிய பிறகு, வங்கதேச முஸ்லீம்கள், ஊடுருவல் மூலமாக அஸ்ஸாம் மாநிலத்தில் குடியேறினர். விவசாயம், வணிகம், தொழில் துறை போன்ற பல துறைகளில் அவர்கள் கை ஓங்கியது. விளைவாக, அஸ்ஸாம் மண்ணின் மைந்தர்கள், அடிமைகளாய் நடத்தப்பட்டனர்.

இந்நிலை உணர்ந்த அஸ்ஸாமியர்கள், ''அஸ்ஸாம் அஸ்ஸாமியர்களுக்கே, மற்றவர்கள் அஸ்ஸாமைவிட்டு வெளியேறுங்கள்'' எனக்கோரி மாபெரும் போராட்டத்தைத் துவக்கினர்.

வடகிழக்கு மாகாண சங்க வேலையைக் கவனித்துவந்த பூஜ்ய சுதர்சன் ஜி அவர்கள், 'அஸ்ஸாம் அஸ்ஸாமியர்களுக்கே' என்பதற்கு பதிலாக, ''அஸ்ஸாம் பாரதீயர்களுக்கே, பங்களா தேசிகளே வெளியேறுங்கள்,'' என்று கோரும்படி, தேசிய கண்ணோட்டத்தை ஏற்படுத்தினார். தேசிய ஒருமைப்பாடு நிலைநிறுத்தப்பட்டது. இல்லையெனில், மராட்டா மராட்டியர்களுக்கே, தமிழ்நாடு தமிழர்களுக்கே போன்ற கோஷங்கள், வலுப்பெற்றிருக்கும் அல்லவா?.

1980-களில், காலிஸ்தான் கோரிக்கையை முன்னிறுத்தி சில சீக்கியத் தீவிரவாதிகள் போராடத் துவங்கினர். பிரிவினைவாதம் தலைதூக்கியிருந்த காலகட்டத்தில், ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கம், பல்வேறு மாநிலங்களிலிருந்து, சில ஊழியர்களை, சங்க வேலைக்காக, பஞ்சாப் மாநிலத்திற்கு அனுப்பிவைத்தது.

''பண்பாட்டு ரீதியாக ஹிந்து-சீக்கியர்கள் ஒரே தர்மத்தைச் சேர்ந்தவர்கள். வழிபாட்டு முறை மாறலாம், ஆனால் வாழ்க்கை முறையால், இரு சமுதாயமும் இசைவோடு இணைந்து வாழ்ந்து கொண்டு வருகின்றன. திருமணம் போன்றவைகளும், இரு சமூகத்தின் குடும்பங்களிடையே நடைபெற்று வருகின்றன. ராமன்,



சீதை போன்றவர்கள் நமக்கு பொதுவானவர்கள். எனவே காலிஸ்தான் கோரிக்கையை நிராகரித்து, தேசிய ஒருமைப்பாட்டைப் பேணி காக்க வேண்டும்,'' என்ற அடிப்படையான சிந்தனையை, பஞ்சாப் மாநிலத்தில், வீட்டுத் தொடர்பு மூலம் சங்கம் ஏற்படுத்தியதன் விளைவாக, காலிஸ்தான் கோரிக்கை வலுவிழந்தது. ஹிந்து-சீக்கிய ஒற்றுமை பலப்பட்டது. பஞ்சாபின் காங்கிரஸ் முதலமைச்சரே, இதற்காக சங்கத்தைப் பாராட்டினார்!

ஜம்மு-காஷ்மீரின் அன்றைய முதல்வர் உமர் அப்துல்லா அவர்கள், அமர்நாத் யாத்திரீகர்களுக்கு பல முட்டுக்கட்டைகள் போட்டு உபத்திரவங்கள் செய்தபோது, சங்கத்தின் வழிகாட்டுதலால் மக்கள் சக்தி திரண்டது, அமர்நாத் யாத்திரையில் பல சாதகங்கள் உண்டாக, மக்களின் அறப்போராட்டம் காரணமாய் அமைந்தது.

அதேபோல், மத்திய-மாநில அரசுகள், சேது சமுத்திரத் திட்டம் என்ற பெயரில், ராமர் பாலத்தைத் தகர்க்கவேண்டும் என்பதில் தலைகீழாய் நின்றுபார்த்தன. சங்கம் மக்கள் சக்தியைத் திரட்டியது. ராமர் பாலம் தகர்ப்புத் திட்டம் தகர்ந்தது!

''காஷ்மீர் மக்களின் விருப்பதிற்கிணங்க காஷ்மீர் தனிநாடாகட்டும் அல்லது பாக்கிஸ்தானோடு சேரட்டும்'', என்று வாதம் வலுப்பெற்றது. ''காஷ்மீர் தற்காலிகமாக பாரதத்தோடு சேர்க்கப்பட்டது (accessed) இரண்டற இணையவில்லை (not merged)," என பிரிவினைவாதிகள் தர்க்கம் செய்தனர். ஆனால், ''காஷ்மீர் பாரதத்தின் பிரிக்கப்பட முடியாத அங்கம்''. இக்கருத்தை நிலைநாட்டியது சங்கம். ''பாரத எல்லைகளின் பாதுகாப்பிற்கு உத்திரவாதம்,'' போன்ற எண்ணற்ற சாதனைகள் நிகழ்வது, சங்கத்தின் தேசிய ஈடுபாடு காரணமாகத்தான் என்பதை நாடறியும்.

## பெரும்பான்மை - சிறுபான்மை வாதம்

பாரதம், ஒரு ஜனநாயக, மதசார்பற்ற நாடு, ஹிந்துக்களுக்காக மட்டும் ஆர்.எஸ்.எஸ். செயல்படுவது தர்க்க ரீதியானது அல்லவே என்ற வாதம் பல்லாண்டுகளாக முன்வைக்கப்படுகிறது. பல பிரதமர்கள் சங்கத்தை வகுப்புவாத இயக்கம் எனச் சாடி வந்தனர். இருப்பினும் ஆர்.எஸ்.எஸ். ஆலாய் தழைத்து, விழுதுகள் விட்டு, வானளாவ வளர்ந்து வருகிறதே! இதன் ரகசியம் என்ன? எனப் பலரும் வியக்கின்றனர்!

மதம் என்பது வழிபாட்டுமுறை, தர்மம் என்பது வாழ்க்கை முறை. 'ஹிந்து' என்பதை தர்மம் என்றே ஆர்.எஸ்.எஸ். அர்த்தம் கொள்கிறது. 'ஹிந்து' என்பது வாழ்க்கை முறையைக் குறிக்கிறது,

என்பதை உச்சநீதிமன்றம் தெளிவு படுத்தியுள்ளது, என்பதை தெளிவாய் புரிந்து கொள்ள வேண்டும்.

சைவம், வைஷ்ணவம், பௌத்தம் ஆகியவை மதங்கள். ஆனால் விருந்தோம்பல், மனைவியை சகதர்ம பத்தினியாக பாவித்தல், கணவனிடம் பதிவிரத்தையாக இருத்தல், அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் எனப் போற்றுதல், ஆச்சார்ய தேவோ பவ என ஆசிரியரை வணங்குதல், சொன்ன வாக்கை காப்பாற்றுதல், நாட்டை தாயாக எண்ணுதல் ஆகியவை தர்மத்தின் சாயல்கள்.

எனவே, காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை பரந்துவிரிந்துள்ள, இந்நாட்டிலுள்ள அனைவரும், ஹிந்து தர்மம், ஹிந்து பண்பாடு, ஹிந்து வாழ்க்கை முறை, என்ற நூலில் ஒன்றாய் கோர்க்கப்படுகின்றனர்.

ஜாதி, மொழி, மதம், மாகாணம் ஆகிய வேறுபாடுகளிடையே, 'ஹிந்து தேசியம்' என்ற உணர்வில் ஒற்றுமை காண்கின்றனர். நமது பாரம்பரியம், பண்பாடு, முன்னோர்கள் அனைவருக்கும் பொது அல்லவா? எனவே, வேற்றுமையில் ஒற்றுமை என்ற இயற்கை நியதி, அனைவரையும் ஒன்றுபட வைக்கிறது, என்பது சங்கத்தின் ஆணித்தரமான நம்பிக்கை ஆகும்.

## தமிழகத்தில் சங்கம்

1939ல் சங்க ஷாகா, முதலில் சென்னையிலும், பின்பு சேலம், கோவை, மதுரை, பரமக்குடி, திருச்சி போன்ற இடங்களிலும் துவக்கப்பட்டது. இன்று தேசிய நீரோட்டத்தில் இரண்டறக் கலந்துள்ள தமிழகம், சங்க வளர்ச்சிக்கு சாதகமாகத் திகழ்கிறது.

ஆனால், திராவிட இயக்கங்கள், அசுரவேகத்தில் வளர்ந்துவந்த அந்த காலக்கட்டங்களில், தனித்திராவிடநாடு, கடவுள் மறுப்பு இயக்கம், ஆரிய - திராவிட வாதம், ஹிந்து விரோதம் போன்ற கருத்துகள் மேலோங்கியிருந்த காலக்கட்டங்களில், சங்க ஷாகாவை தமிழகத்தில் நடத்துவது என்பது எதிர்நீச்சல் போடுவதற்கு சமமாகத் தான் இருந்தது. இருப்பினும் சங்கப் பிரச்சாரகர்கள் மற்றும் ஊழியர்களின் மனம் தளராத, கடுமையான உழைப்பின் காரணமாக, சங்க விதை, தெய்வத் தமிழ் மண்ணில் முளைத்து, செடியாகி, மரமாகி, காயாகி, பழமாகி இன்று பெரும் சமுதாயத் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

முடமான குழந்தை எழுந்து நடந்து, ஓடினாலோ, திக்குவாய் குழந்தை அழகு தமிழில் பேசினாலோ, கணக்குப் பாடத்தில் தேறாத பிள்ளை, இறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றாலோ பெற்றோர் எவ்வளவு மகிழ்ச்சி அடைவர்!





*மதமாற்றம் நடைபெற்ற மீனாட்சிபுரத்தில் ஹரிஜன சகோதரர்கள் மத்தியில் பெஜாவர் மடத்தின் பீடாதிபதி விஸ்வேஸ்வர தீர்த்தர் குறைகளை கேட்டறிகிறார்.*

அதுபோல, 1981ல் திருச்சியில் நடந்த சங்க ஊழியர்களின் அமர்வில், தமிழகத்தில் சங்கம் வேரூன்றி, வேகமாக வளர்ந்து வருகிறது, என்ற மாவட்ட செயலர்களின் அறிக்கையைக் கேட்ட அப்போதைய சங்கத் தலைவர் பூஜனீய பாளா சாகேப் தேவரஸ் குறிப்பிட்டார் **The hard nut has cracked.** (பாறாங்கற்கள் உடைந்தன, சங்க ஊற்று பீறிட்டது)

1975 அவசர நிலை அறிவிக்கப்பட்ட போது பல சங்க ஊழியர்கள், பிரச்சாரகர்கள் மீது **MISA, DIR** சட்டங்கள் பாய்ந்தன தமிழகத்தில் 100ஜி சீனிவாசன்,(சென்னை) உத்தமராஜ்ஜி,(திருச்சி) ம.வீரபாகுஜி, (வேலூர்) ராமரத்தினம் ஆசிரியர், (தஞ்சை) ராமநாத் ஜி, (சேலம்) போன்ற பல கார்யகர்த்தர்கள் கைதாகினர். 'நெருப்பைப் பொட்டலம் கட்டிய வரலாறு இல்லை' என தங்களுடைய போராட்ட குணத்தைப் பற்றிப் போற்றிக் கொண்டிருந்தனர். சில கட்சிகாரர்கள், மிசாவில் சிறைபிடிக்கப்பட்டபோது, மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டு வெளியில் வந்தார்கள்.

ஆனால் சங்க ஊழியர்கள், சித்திரவதைகளுக்கு உட்பட்டாலும் சிறை வாழ்க்கையை அனுபவித்தார்கள். துன்பம் நேர்கையில் அவர்களுக்கு தெம்பூட்டியது, 'பாரத் மாதா கீ ஜெய், வந்தே மாதரம்' கோஷங்கள்!

வேடிக்கை என்னவெனில், ஸ்வயம்சேவகர்கள் சிறைக்குள் பல நிகழ்ச்சிகளை நடத்தினர். திமுக, திக காரர்கள் இவர்களின் நண்பர்களாயினர். வெளியே வந்தபின் சங்க ஆதரவாளர்களாயினர்.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் தவமிருந்த பாறையின் மீது, பிரம்மாண்டமான விவேகானந்தர் நினைவு மண்டபம் அமைய தமிழக ஸ்வயம்சேவகர்களின் பங்கும் மகத்தானது.

மீனாட்சிபுரத்தில் ஒட்டுமொத்த மதமாற்றம் நடந்தபோது ஆர்.எஸ்.எஸ்., விஸ்வஹிந்து பரிஷத், ஆலய பாதுகாப்புக் கமிட்டி, போன்ற ஹிந்து அமைப்புகள், நாகர்கோவில், மதுரை, சேலம் போன்ற ஊர்களில், மாபெரும் ஹிந்து எழுச்சி மாநாடு மற்றும் ஊர்வலங்களை நடத்தி, சமுதாயத்தில் ஹிந்து விழிப்புணர்வை ஏற்படச் செய்தன.

ஹிந்து நினைத்தால், மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வர முடியும் என்பதை வேலூர் மாவட்ட ஹிந்துக்கள், ஹிந்து முன்னணியின் உதவியுடன் நிரூபித்தனர்.

ஹிந்து முன்னணியின் தலைமையில் ஹிந்து இயக்கங்கள் அணிதிரண்டு, வேலூரில் கோட்டைக்குள் இருந்த ஜலகண்டேஸ்வரர் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, ஆலயம் பொலிவுடன் விளங்கச் செய்தனர்.

அவசரநிலை நீக்கப்பட்டபிறகு 1977ல், சங்கத்தின் வேலை தமிழகமெங்கும் பரவும் நோக்கில், திரு. சோ. ராமசாமி முயற்சியில் சூர்யநாராயணராவ் அவர்களின் பேட்டி, துக்ளக் இதழில் பிரசுரமானது.

சங்கத்தின் லட்சியம், செயல்முறை மற்றும் சாதனைகளை, துக்ளக்-ல் படித்த நூற்றுக் கணக்கானோர், சென்னை காரியாலயத்திற்கு கடிதம் எழுதி, சங்கத்தில் சேரும் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். பல புது ஊர்களில் சங்க கிளைகள் துவக்கப்பட்டன. தமிழக சங்க வரலாற்றில் இது ஒரு மைல்கல் ஆகும்.

ஆர்.எஸ்.எஸ்.ஸின் தொடர்பால் பூஜ்ய சித்பவானந்த சுவாமிகள், நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் போன்றவர்கள் சங்க ஆதரவாளர்களாயினர்.

1980ல் திருவேடகம் விவேகானந்தர் கல்லூரியில் நடந்த ஆர்.எஸ்.எஸ். பண்பு பயிற்சி முகாமின் நிறைவு விழாவில், பெரிய சுவாமிஜி அவர்கள் ஸ்வயம்சேவகர்களைப் பார்த்து, ''நீங்கள் பாக்கியவான்கள்'', எனக் குறிப்பிட்டார்.



''மடம், கல்வி நிறுவனங்கள் உங்கள் தாய்வீடு, எப்பொழுது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்'', என பூஜ்ய சித்பவானந்த மகராஜ் அவர்கள் குறிப்பிட்டார்.

1983-ல் சங்க பயிற்சி முகாம் நடத்த சேலம் ஸ்ரீராமகிருஷ்ணா சாரதா பள்ளியைக் கேட்டபோது பள்ளியின் தாளாளர் யதீஸ்வரி சாரதா பிரியாம்பாள் அனுமதி மறுத்தபோது, "நம்மைப் போல சுவாமி விவேகானந்தரின் கருத்துகளுக்காகத்தான் ஆர்.எஸ்.எஸ் பணியாற்றுகிறது. அதன் முகாமிற்கு அனுமதி வழங்குங்கள்'' எனக் கடிதம் எழுதினார்.

அனுமதி வழங்கிய பின்னர், முகாமை பார்வையிட்ட சாரதா பிரியாம்பாள் சங்கத்தை வெகுவாகப் பாராட்டினார்கள்.

தமிழகத்தில் தீண்டாமையை வேறும் வேறடி மண்ணும் இல்லாமல் அகற்றுவதற்கும், குடிநீர், கோவில், மயானம் ஆகியவை அனைவருக்கும் பொதுவாக இருக்கவேண்டும் என்பதற்கும் சங்கம் மற்றும் ஹிந்து இயக்கங்கள் பெரிதும் பாடுபட்டு வருகின்றன.

மறைந்த பிரச்சாரக் ஸ்ரீ கோவிந்தன்ஜி, ராமநாதபுரம் ஜில்லா சங்கசாலக் மானனீய ஆத்மாநாத சுவாமி அவர்கள், மாநில ஆர்.எஸ்.எஸ். தலைவராயிருந்த மானனீய வி. ரங்கசாமி தேவர், ஹிந்து முன்னனி தலைவர் தாணுலிங்கநாடார், நிறுவனர் மானனீய ராமகோபாலன் ஜி ஆகியோர் தமிழகத்தில் இந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி சமுதாய நல்லிணக்கத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளனர்.

ஜாதி மோதல்கள் நடந்த, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம் பகுதிகளில், சங்ககிளைகள் நடந்துவரும் பகுதிகளில் ஜாதி சண்டைகள் நடைபெறாமல் சமூதாய நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டது.

அமரர் ஸ்ரீ சிவராம்ஜி என்ற பிரச்சாரக் தொண்டுப் பணிகளுக்கு ஒரு செயல்வடிவம் கொடுத்தார். 80 வயதைத் தாண்டிய அவர் முன் உதாரணமாக தேகதானம் வழங்க முடிவு செய்தார். அவர் இறந்தபிறகு அவரது, விருப்பப்படி உடல் ஸ்ரீராச்சந்திரா மருத்துவமனைக்கு தேகதானம் செய்யப்பட்டது.

இதையறிந்து சேலம் திரு. செல்வம்ஜி போன்ற பலர் தேகதானம் செய்ய தங்கள் விருப்பத்தைப் பதிவு செய்துள்ளனர். ஆயிரக் கணக்கானோர் கண்தானம் வழங்கியுள்ளனர். லட்சக்கணக்கானோர் ரத்ததானம் வழங்கி வருகின்றனர். சேலத்தில் அமரர் சிவராம்ஜி பெயரில் ரத்தவங்கி ஒன்று செயல்பட்டுவருகிறது. இவையனைத்தும் சங்கத்தின் சேவாபாரதி அமைப்பின் வழிகாட்டுதலில் நடைபெற்று வருகின்றன.

மேலும், தமிழகத்தில் இயற்கை சீற்றங்களால் ஏற்பட்ட பேரிடர் நிகழும் நேரங்களில் சங்க ஸ்வயம்சேவகர்களின் நிவாரணப் பணிகளை ஊடகங்களும் பொது மக்களும் வெகுவாக வியந்து பாராட்டியுள்ளனர்.

சுனாமியின் தாக்கத்தால், சென்னை, கடலூர், நாகப்பட்டிணம், கன்யாகுமரி மாவட்டங்களில், எத்தனையோ கடலோரக் குப்பங்களும், கிராமங்களும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாயின. சங்க ஸ்வயம் சேவகர்கள் உடனடியாக நிவாரணப் பணிக்கு விரைந்தோடினர். பலியானவர்களில் அழுகிய பிணங்களை அகற்றி உறவினர்களிடம் ஒப்படைத்தனர். ஈமக்கடன் செய்தல், காயம்பட்டவர்களுக்கு மருத்துவ சேவை, வீடிழந்தோர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் போன்ற தேவைகளை உடனே செய்து கொடுத்தனர்.

சில மாதங்களுக்குப் பிறகு, புது தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தல், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இலவச டியூசன் வகுப்புகள் நடத்தல், மனதால் பாதிக்கப்பட்டவர்களை சாந்தப் படுத்தி, தன்னம்பிக்கையை ஊட்டி, வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்துதல், போன்ற பணிகளில் சேவாபாரதி ஈடுபட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னை, ஓசூர், ஆம்பூர், ராமநாதபுரம் போன்ற இடங்களில் அன்பு இல்லங்களை சேவாபாரதி நடத்தி வருகின்றது. ஆதரவற்ற குழந்தைகள், இந்த அன்பு இல்லங்களின் சொந்தக்காரர்கள்.இங்கு படித்து, ஆளாகி, வாழ்க்கையில் சொந்தக்காலில் நின்று நிம்மதியாய் வாழ்வோர் பலருண்டு!

'புறந்தள்ளப்பட்ட மலைவாழ் மக்களும் நம் சமுதாயத்தின் சிறப்பான அங்கங்கள்' என்ற உணர்வோடு, தமிழ்நாடு வனவாசி சேவாகேந்திரம், திருவள்ளூர், கருமந்துரை, அரூர், சத்தியமங்கலம், கோவை போன்ற இடங்களில் கல்வி, மருத்துவம், பொருளாதாரம், ஆன்மீகம் போனற துறைகளில் பல தொண்டு காரியங்களை செய்துவருகிறது.

இதன்மூலம் மலைவாழ் மக்களின் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து, கருமந்துரை காவல் துணை ஆய்வாளர் இவ்வாறு கூறினார் :

''சேவா கேந்திரத்தின் தாக்கத்தால் இப்பகுதிகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. குடித்துவிட்டு பெண்டாட்டியை அடித்தல், கடுக்காய் திருடுதல், குழந்தைகளை பள்ளியிலிருந்து தீடீரென நிறுத்தி ஆடுமாடுகளை மேய்க்கச் செய்தல், போன்ற பல விஷயங்கள் வெகுவாகக் குறைந்துள்ளன''.



கன்யாகுமரி மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிகுழுக்களின், வேலை காரணமாக, பெண்களின் வாழ்வில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## நாளைய ஸ்வயம்சேவகர்கள்

சங்க ஸ்வயம்சேவகர்களிடம் சில தனிப்பண்புகள் காணக் கிடைக்கின்றன- சுயநலமின்மை, தனி மனித மற்றும் தேசிய ஒழுக்கம், சங்கக்கட்டுப்பாடு, விலைக்கு வாங்கிட இடங்கொடாமை, தாயகத்தின் நலன் விழைதல், ஹிந்து என்பதில் பெருமிதம் கொள்ளுதல், அநியாயத்தை சகியாமை, நான்குபேருடன் சேர்ந்து செயல்படல் போன்றவைகள்.

இப்பண்புகளை ஸ்வயம்சேவகத்துவம் என்ற ஒரே சொல்லால் குறிப்பிடலாம். அதிசயம் என்னவென்றால், சங்கத்தில் சேருவதற்கு முன்பே பலரிடம் ஸ்வயம்சேவகத் தன்மை இருப்பதைக் காண முடியும்.

எடுத்துக்காட்டாக அண்மையில் அமரரான திரு. **APJ** அப்துல் கலாம், ஜாதி, சமயம் கடந்த மாமனிதர் நிகரற்ற தேசபக்தர், பதவி ஆசைகளைத் துறந்த எளியவர்.

ஒரு முறை அன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஜி திரு. அப்துல்கலாம் அவர்களை தனது அமைச்சரவையில் கேபினட் அமைச்சராக வேண்டும் என அழைப்பு விடுத்தார். ஆனால் ''விண்வெளி ஆராய்ச்சி மூலம் ஒரு விஞ்ஞானியாகவே நாட்டுக்கு சேவை செய்ய விரும்புகிறேன் அமைச்சர் பதவி வேண்டாம்.'' என்று ஸ்ரீ வாஜ்பாய்ஜியின் வீட்டிற்கே சென்று அடக்கமாகத் தன் கருத்தை சொல்லிவிட்டார்! பொக்ரானில் அணு சோதனை நடந்தபிறகு சிலர் அதை எதிர்த்தனர். வலிமையுடைய நாடே முன்னேற முடியும். நம் முன்னோர்கள் வலிமையை வணங்கியவர்கள் எனச் சொல்லி, வலிமை உடையவன்தான் அஹிம்சை பேச வேண்டும் என அசத்தினார் திரு. கலாம் அவர்கள்.

நேரு அவர்களின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த திரு. எம்.சி. சாக்ளா, அவர்கள், தான் மதத்தால் ஒரு முஸ்லீம், ஆனால் பண்பாட்டு ரீதியாக ஒரு ஹிந்து, என்று பெருமிதம் கொண்டார். ஹிந்து வாழ்க்கை முறையை அனைவரும் பின்பற்ற முடியும். அவர்கள் அத்தனைபேரும் தர்ம ரீதியாக ஹிந்துக்களே.

சென்னையைச் சேர்ந்த எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த காந்திய வாதி. பல்வேறு சமுதாய பணிகளில் ஈடுபட்டு வருபவர். மனநலம் குன்றிய குழந்தைகளுக்காக மாம்பலம் பகுதியில் ஒரு பள்ளியும்,

மாம்பலம், அடையாறு பகுதிகளில் மருத்துவ மையங்களையும் ஏற்படுத்தி சேவை மனப்பான்மையோடு நடத்திட ஏற்பாடுகள் செய்தார்.

திரு. கக்கன் விஸ்வநாதன் போன்ற எண்ணற்றோர் சமுதாயப் பணியில் அக்கறை கொண்டவர்கள்.

சங்க உறுப்பினர்களில்லை, ஆனால் கட்டாய மதமாற்றத்தை எதிர்ப்பவர்கள் பலருண்டு. சமுதாயக் கொடுமைகளை அகற்ற நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு போராடுபவர்கள் பலருண்டு. நலிந்தோர்க்கு கனிவுடன் தொண்டு செய்கின்றவர்கள் பலருண்டு.

இப்படிப்பட்டவர்களின் பணி மிகவும் பாராட்டுக்குரியது. ஆனால், கலியுகே சங்கே சக்தி அல்லவா? ஆங்காங்கே, பல சேவைகளை, தனித்தனியாக **(isolated)** செய்பவர்கள், சங்கத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டால் **(organized** - ஆக), மக்கள் சக்திகூடும், விரைவில் சமுதாயப் பிரச்சனைகள் தீரும், நாடு விரைவில் உய்வடையும்.

மேலே குறிப்பிடப்பட்டவர்கள் நாளைய ஸ்வயம்சேவகர்கள், ஸ்வயம் சேவகத் தன்மை கொண்டவர்களை இனங்கண்டு முறையாக ஸ்வயம் சேவகர்களாக்குவது இன்றைய ஸ்வயம்சேவகர்களின் கடமையாகும்.

வித்தியாசமான சிலரையும் சமுதாயத்தில் காணலாம். இவர்கள் நல்லவர்கள், மிகவும் நல்லவர்கள். ஆனால் ''ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையில்லை,'' என்று வாளா இருப்பார்கள்.

இப்படிப்பட்டவர்களுடைய சிந்தனைக்கு சாணக்கியர் ஒரு கருத்தை வைக்கிறார். அதாவது ''தர்மத்திற்கும், அதர்மத்திற்கு மிடையே சண்டை நடக்கின்றபோது, வேடிக்கை பார்த்துக்கொண்டு சும்மா இருப்பவன், அதர்மத்திற்கே துணை போகிறான் என்றே பொருள்''. எனவே நல்லவர்கள் சங்கத்தில் இணையனும், தேச சேவையில் பங்கு பெறணும்.



# முடிவுரை

ஒரு முறை, ஆனைமலை அருகே, ஆக்ஸ்போர்டு மேல்நிலைப் பள்ளியில், சங்கத்தின் ஒருவாரப் பண்புப்பயிற்சி முகாம் நடைபெற்றது. அதே பள்ளியில் 12-ம் வகுப்பு மாணவிகளுக்கான சிறப்புவகுப்பு **(Special Class)** களும் நடைபெற்று வந்தன.

''அரை நிக்கரை மாட்டிக் கொண்டு நடமாடும் வாலிபர்களைப் பெண்கள் படிக்கும் பள்ளியில் ஏன் அனுமதித்தீர்கள்?'', என சில மாணவிகளின் பெற்றோர்கள் தங்கள் ஆட்சேபனைகளை நிர்வாகத்தினருடன் பதிவு செய்தனர்.

பள்ளியின் தாளாளர், '' இவர்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். பண்பு பயிற்சி முகாமிற்காக வந்துள்ளார்கள்'', என விளக்கமளித்தார்.

உடனே அப்பெற்றோர்கள், '' அப்படியா! ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் எனில் அவர்கள் ஒழுக்கமும், கட்டுப்பாடும் மிக்கவர்கள், எந்தப் பிரச்சனையும் இல்லை'', எனத் தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்தார்கள்.

உண்மைதான். சங்கத்தினரின் செயல்பாடுகள் ஸ்வயம்சேவகர்களுக்கு சுபாவமானவை. ஆனால் கண்ணுறும் சமுதாயத்தினருக்கு ஆச்சரியமளிக்கக் கூடியவை.

ஒருமுறை பெட்டவாய்த்தலையைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் சங்க முகாமின் நிறைவு விழாவில் தலைமை தாங்க வந்தார். வாத்ய இசையுடன் வரவேற்பளிக்கப்பட்டு, மேடைக்கு அழைத்து வரப்பட்டார். அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

தலைமையுரையில் சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

காலப்போக்கில் சங்கத்தினரின் நல்ல தொடர்பு காரணமாக சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பின்னர் ஷாகாவிற்கு வரத் துவங்கினார். அடுத்தாண்டு சங்கப் பயிற்சி முகாமில் அரைநிக்கர் அணிந்து கொண்டு அந்த மருத்துவர் பயிற்சியாளராகப் பங்கு பெற்றார்.

முதல் வருடம் விழாத்தலைவர், அடுத்த வருடம் நிக்கர் அணிந்து கொண்டு தரையில் அமர்ந்த சாதாரணப் பயிற்சியாளர்! இவ்விஷயம் அவரது நண்பர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

தூரத்திலிருந்து தூற்றிய பலர் நெருங்கி வந்து நிகழ்ச்சிகளைப் பார்த்த பின் மனமாற்றம் கொள்கின்றனர். ஏன்? ஆர்.எஸ்.எஸ். தேசியத்தையும், தெய்வீகத்தையும் இரு கண்களாகக் கொண்டு செயல்படும் சுயநலமற்ற தன்னார்வ தொண்டு அமைப்பு ஆகும். இது இறைவனின் பணி, திறந்த மனதோடு இப்புத்தகத்தைப் படித்த அனைவரும் சங்கத்தை சரியாகப் புரிந்து கொள்வார்கள் என்றே கருதுகிறேன்.

புரிந்து கொண்ட பலரும் பாராட்டலாம். ஆனால் அதில் சிலர் இந்த உயர்ந்த லட்சியத்திற்காக கொஞ்சம் வாழ முற்பட வேண்டும் என்பதே ஒரு சின்ன ஆசை.

ராமாயணத்தில் ஒரு காட்சி நினைவிற்கு வருகிறது. சீதையைத் தேடி இலங்கை சென்ற ராம பக்த அனுமன், விபீஷணர் மாளிகையில் ஸ்ரீராம் ஜெயராம், ஜெயஜெய ராம் என்ற ராம நாம உச்சாரணத்தைக் கேட்டு பரவசமடைகிறார்! ராமநாமத்தால் ஹனுமன் பணிவு கொள்கிறான் உள்ளே எட்டிப்பார்த்தால். வீபீஷணன்தான் அந்த ராமபக்தன் என அறிந்து, வீபீஷணனைப் பாராட்டிய ஹனுமன், அடுத்த நொடியே கோபமடைந்தான். கண்கள் சிவந்தன.

''விபீஷணா, உன் ராமபக்தி நியாயமானது என்றால், ஜெகன் மாதா சீதையை உன் அண்ணன், இலங்கை மன்னன் இராவணன் சிறைபிடித்து வைத்துள்ளானே, அதைத் தட்டிக் கேட்காதது ஏன்?

''ராவணனை எதிர்த்துப் போராடாதது ஏன்?'', எனக் கேட்டான் ஹனுமன். விபீஷணன் யோசித்தான், நியாயத்தை உணர்ந்தான்.

ராமபக்திக்குச் செயல்வடிவம் கொடுக்கத் துணிந்த விபீஷணன் ராவணனோடு சீதையை விடுவிக்கப் போராடினான். விளைவு? நாடு கடத்தப்பட்டான். துன்பத்தைக் கண்டு தளராத விபீஷணன் தர்ம யுத்தத்தில் ராமனோடு சேர்ந்தான்.

அதுபோல தேசம், தெய்வம், தர்மம் மீதுள்ள பக்திக்கு செயல் வடிவம் கொடுப்போம். ''வாருங்கள்....ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சியில் பங்கு கொண்டு, தேசியப் பணியில் தோள் கொடுக்க வாரீர்!

**பாரத மாதா கீ ஜெய்!**